KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 1 ISSUE : 1



## பாவம் பேசும் பரதநாட்டியக்கலை

## தாலி

ஒரு கலாசார பார்வை

## சென்னை இசைவிழா

ஒரு கண்ணோட்டம்

## புதிர் எடுத்தலும் தைப்பொங்கலும்

யாழ் மண்ணின் மரபு



| | | |
|---|---|---|
| INDIA..............INR 100.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA.....SLR 200.00 | AUSTRALIA...AU$ 10.00 | UK............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE..EUR 7.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்





**36**
இலங்கையில்
நாட்டுக்கூத்துக் கலை

**38**
பிரசித்தி பெற்ற
களனி ஆலயம்






**06**
தாலி சம்பிரதாயங்கள்
ஒரு கலாசார பார்வை

**12**
சென்னை இசை விழா

**22**
கருங்கல் சிவாலயம்

**28**
இலங்கையில் 7 புராதன
செல்வங்கள்

**32**
வரம் தரும் நல்லூர்
கந்தசுவாமி ஆலயம்







**44**
மணப்பெண்
அலங்காரம்

**50**
சீனப்பெரும் சுவர்

**54**
எலிபன்ரா
குகைக்கோயில்

**60**
பழமை வாய்ந்த
சிகிரியா நகரம்


**அட்டைப்படம்:**
பிரபல நர்த்தகி
ரமா வைத்தியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பக்கம்



**அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!**

அன்பார்ந்த வாசகர்களே!

வணக்கம்!

உங்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களும், இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். 'கலைக்கேசரி' என்னும் மாதாந்த சஞ்சிகையை, மிகக் கவர்ச்சிகரமான வடிவில் உங்கள் கரங்களில் தவழ விடுவதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கலை, கலாசாரம் மற்றும் இலக்கியச் செயற்பாடுகள் இலங்கையில் மட்டுமன்றி, வெளிநாடுகளில் குறிப்பாக எம்மவர்களான ஈழத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாடுகளிலும், தற்போது முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இத்தகையதோர் அனுகூலமான பின்னணியில் **'கலைக்கேசரி'** வெளிவருவது ஒரு முக்கியமான நிகழ்வென்றே நாம் கருதுகிறோம்.ஓர் இனத்தின் பெருமைக்குரிய அம்சமாக விளங்குவது அந்த இனத்தின் கலை, கலாசார, பண்பாட்டுப் பின்னணியாகும். அதை உரிய முறையில் பேணி, நமது அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவது நமது கடமையாக இருக்கிறது.

**'கலைக்கேசரி'** உள்நாட்டுத் தமிழ் மக்களின் கலை, கலாசார முயற்சிகளுக்கு மட்டுமன்றி, இலங்கை வாழ் சிங்கள, முஸ்லிம் மக்களினதும் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மவர்களினதும் கலை, கலாசார, பண்பாட்டுச் செயற்பாட்டுக்கும் ஊக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே உங்கள் அனைவரினதும் ஆதரவையும் பங்களிப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரை **'கலைக்கேசரி'**யின் கலைத்துவமான தோற்றம் ஒரு புதிய முயற்சி என்பதனை வாசகர்கள் அறிவார்கள். எனவே எமது இம் முயற்சியை மகிழ்ச்சியுடன் வரவேற்பீர்கள் என நம்புகின்றோம். வாசகர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அனைத்துத் தமிழ் நெஞ்சங்களின் ஆதரவு **'கலைக்கேசரி'**யை மேலும் செழுமைப்படுத்துமென நம்புகிறோம்.

**மீண்டும் சந்திப்போம்**
**வணக்கம்**


**PUBLISHER**
**Express Newspapers (Cey) (Pvt) Ltd.**
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5322700
www.kalaikesari.com
e-mail:editor@kalaikesari.com
subscription@kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai

**SUB EDITOR**
Bastiampillai Johnsan

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**PHOTOS**
N. Joy Jeyakumar
S. M. Surendran
S. Vijayabalan

**CONTRIBUTORS**
Kalaimamani Pon. Theivendran
Padma Somakanthan

**GRAPHICS**
S. Karthikeyan
N. Gowry Sanker
S. Pressanna

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
M. Senthilnathan

**CIRCULATION**
S. Alexandar

**PRODUCTION**
L. A. D. Joseph


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாலி சம்பிரதாயங்கள்

## ஒரு கலாசார பார்வை

> "தமிழர் வாழ்வில் எழுதப்படாத சட்டமாகவும் சாஸ்திரமாகவும் ஆகிவிட்ட திருமாங்கல்யம் கணவன் - மனைவி பந்தத்தை வலுவுடையதாக்கி குடும்ப உறுதிப்பாட்டுக்கு அடித்தளமிடுகின்றது."

தாலி என்பது சமூக, பண்பாட்டு, சமய வெளிப்பாடாக தோன்றுவதோடு கணவன் மனைவியிடையே உருவாகும் ஆழமான அன்பையும் விருப்பையும் கணவனின் நீண்ட ஆயுளையும் குறித்து நிற்கின்றது. மனைவியின் கழுத்தில் தான் கட்டிய தாலியைக் காணும் கணவன் இவள் எனது மனைவி, எனக்குச் சொந்தமானவள், இவள் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வராது பாதுகாக்க வேண்டியது எனது கடமை என நினைக்கிறான். தாலியைச் சுமந்திருக்கும் மனைவியோ இவன் என்னை மணந்து எனக்குப் புதிய வாழ்வு தந்தவன், அவனுக்கு உரியவளாக நான் வாழ வேண்டும் என்று நினைக்கிறாள். இவ்வாறான எண்ணங்கள் இருவருக்குமிடையேயுள்ள பந்தத்தை வலுவுடையதாக்கி குடும்ப அமைப்புக்கு அடித்தளமிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



## தாலியின் தோற்றம்

தாலி என்பது ஆரம்பத்தில் பனை ஓலையினால் தயாரிக்கப்பட்ட கழுத்தணியை அணியும் வழக்கத்துடன் ஆரம்பித்திருக்கலாம். பனை ஓலை நீண்ட காலம் அழியாது நிலைக்கும் என்பதால் அதை அணிந்து வந்துள்ளனர். சங்க இலக்கியங்களில் ஒரு ஆண் தான் கொன்ற புலியின் பல்லைத் தன் வீரத்தின் அடையாளமாகத் தன் காதலியின் கழுத்தில் அணியும் வழக்கம் காணப்பட்டதை அகநானூறு குறிப்பிடுகின்றது. இன்று வழக்கத்திலுள்ள தாலி முறை கி. பி. 958 ஆம் ஆண்டு கல்வெட்டொன்றில் முதன் முதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்டது. ஒன்பது இழைகள் கொண்ட மஞ்சள் கயிற்றில் மஞ்சளைக் கட்டி அணிவதே பெரும்பாலான தமிழர்கள் காலங்காலமாக கைக்கொண்டு வரும் முறையாகும். பின்னர் மஞ்சளுக்குப் பதிலாக தங்கத்தில் தாங்கள் வழிபடும் இஷ்டதெய்வங்களின் உருவங்களை செய்து மஞ்சள் கயிற்றில் கோர்த்து அணிந்தார்கள்.

கஷ்டம் வரும் போது உதவும் என்ற வகையில் யாழ்ப்பாணத்தில் மஞ்சள் கயிற்றுக்குப் பதிலாக பொற்கொடி செய்து அதில் தாலியைக் கோர்த்து கட்டும் வழக்கம் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் எத்தனை கோடி பணம் இருந்தாலும் தாலியை மஞ்சள் கயிற்றில் கோர்த்துக் கட்டும் வழக்கம் இன்றுவரை தொடர்கிறது. யாழ்ப்பாணத்தில் வசதியுள்ளவர்கள் 25 பவுனில் கொடி செய்து போடும் பழக்கம் கடந்த நூற்றாண்டில் காணப்பட்டது. பின்னர் 8 முதல் 10 பவுணில் கொடி போடும் முறை சாதாரணமாக இன்றுவரை தொடர்கிறது.

புலம்பெயர்ந்து செல்வந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் தமது பணப் புழக்கத்தைப் பறைசாற்ற மனைவியின் வயதையொத்த பவுணில் தாலி செய்து அணிவிக்கும் பகட்டும் ஆரம்பித்திருக்கிறது. உதாரணமாக தனது மனைவிக்கு 60 வயது பிறந்த தினத்தைக் கொண்டாடிய பிரான்ஸ் வாழ் தமிழர் ஒருவர் 60 பவுணில் தாலி செய்து அணிவித்த செய்தியை பாரிஸ் ஈழநாடு பிரசுரித்திருந்தது.

## தாலிப் பொருத்தம்

திருமண ஜாதகப் பொருத்தத்தில் தாலிப் பொருத்தம் முக்கியமானது. அது கணவனின் ஆயுளுடன் சம்பந்தப்பட்டது என்ற நம்பிக்கை பலமாக நம்மிடத்தில் உண்டு. உத்தம பொருத்தமாக இருந்தால் பொதுவாக பிள்ளையார் தாலி அணிவார்கள்.





மத்திம பொருத்தமாக இருந்தால் யாரை குலதெய்வமாக வணங்குகிறார்களோ அந்தத் தெய்வ உருவத்தை தாலியாக செய்து போட்டால் மத்திம ஆயுள்தோசம் அகன்று விடுகிறது என்று சாஸ்திரம் சொல்கிறது.

இப்படித்தான் தாலி இருக்க வேண்டும் என்று ஒரு விதி கிடையாது. தாலி வடிவங்களை வைத்துக் கொண்டு அவற்றை பிள்ளையார் தாலி, சிவன் தாலி, அம்மன் தாலி, தேர்த்தாலி, புறாத்தாலி , இராமர் தாலி, பொட்டுத் தாலி என பல புழக்கத்தில் உள்ளன. பொதுவாக கிறிஸ்தவர்கள் புறாத்தாலி அணிவார்கள். சிலர் வேதாகமத்தில் புறா வடிவம் வைப்பார்கள்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் சவடி அணிவார்கள். ஆரம் போன்ற வடிவத்திற்கு பல்வேறு டிசைன்கள் அமைப்பார்கள். முஸ்லிம்கள் சவடியை சங்கிலியில் கோர்த்து அணிவதும் தமிழர்கள், கிறிஸ்தவர்கள் கொடியில் கோர்த்தும் அணிவது வழமை. பிள்ளையார் தாலியை விட, லிங்கத் தாலியே மலையகத்தில் அதிகளவில் அணியப்படுகிறது. தற்போது கல் வைத்து செய்த திருமாங்கல்யம் புழக்கத்திற்கு வந்து விட்டது.தமிழர்களைப் பொறுத்தவரையில் திருமாங்கல்யம் எழுதப்படாத சட்டமாகவும் சாஸ்திரமாகவும் ஆகி விட்டது என்பது புறக்கணிக்கடியாத உண்மை.

## தாலி சுவாரஸ்யங்கள்

திருமண சபையில் உள்ளோரில் யாராவது தும்முதல், அபசகுண வார்த்தைகள் பேசுதல் போன்றவை மணமக்களிற்கு கேட்கக் கூடாது என்பதற்காகவே தாலி கட்டும் போது கெட்டி மேளம் கொட்டப்படுகிறது. அதுபோல், தாலி கட்டும் போது தூவப்படும் அட்சதையும் மணமக்களை தீய சக்திகளிடமிருந்து காப்பதற்கும் வளமான வாழ்க்கை அமைவதற்கும் மணமக்களை ஆசீர்வதிப்பதற்குமாகும். இன்னும் 'ஒரு பிள்ளை பெற்றாள் உடனே செத்தாள்' என்று வாழையைக் கூறுவார்கள். வாழைக்கு தெய்வ குணம், பெண்ணின் குணம் இரண்டும் உள்ளது. எனவே வாழையை பெண்ணாக எண்ணி வாழைக்கு தாலி கட்டினால் மணமுறிவு ஏற்படாமல் தவிர்க்கலாம். சிலருக்கு ஜாதகத்தில் இரண்டு திருமணங்கள் இருக்கும். இவர்களுக்கு இது போன்று செய்வார்கள்.

- பி.ஜோன்சன்

நன்றி:
மயில் வாகனம் மகேந்திரராஜா (உரிமையாளர்)
[illegible] ஜுவலரிஸ்,செட்டியார் வீதி,கொழும்பு -11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுத்திரை

## கான சரஸ்வதி டி.கே.பட்டம்மாள்



1919ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி காஞ்சிபுரத்தில் பிறந்த தாமல் கிருஷ்ணசுவாமி பட்டம்மாள் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி மறைந்தார் இவரும்,இவரது சமகாலத்தவர்களான எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் எம்.எல்.வசந்த குமாரி ஆகிய மூவரும் இன்றும் கர்நாடக சங்கீத உலகில் மும்மணிகள் எனக் கருதப்படுகிறார்கள். பெண்கள் கர்நாடக சங்கீத உலகின் பிரதான நீரோட்டத்தில் பிரவேசிக்க ஊக்கமளிப்பவர்களாக திகழ்ந்தார்கள்.

பல கோடி இசை ரசிகர்களையும் சாதாரண பொது மக்களையும்கூட தன் தேனிசையால் மகிழவைத்து மயங்க வைத்த டி கே. பட்டம்மாளின் இசையுலக ஆரம்பம் பெரும் புரட்சிகரமானது; துயர் மிக்கது. அதே வேளை, அளவிலா ஆனந்தமயமானது என்றும் கூற வேண்டும்.

டி.கே.பட்டம்மாளின் தந்தையார் தமிழ் நாட்டின் சிறப்பான பல ஆலயங்களைக்கொண்டு விளங்கும் காஞ்சிபுரத்திலே மரபு வழுவாது வாழும் வைதீக பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர்; பெயர் கிருஷ்ணசாமி தீட்சிதர். மிகவும் வறுமையான நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கும் இக் குடும்பத்திலே இவரின் மனைவியான ராஜம்மாள் இறைவனின் கொ[illegible]



சையில் வல்லவராகத் திகழ்ந்தார். ஆனாலும், இவர்மேடையிலோ பலர் மத்தியிலோ பாடும் வாய்ப்புக்கள் அக்காலத்தில், அதுவும் பிரமாணப் பெண்களுக்குக் கிட்டாத ஒன்று.

கடினமான சங்கதிகளைக் கொண்ட தெலுங்குக் கீர்த்தனைகளையெல்லாம்கூட வெகு அநாயசமாகப் பாடும் வல்லமை கொண்டவர் ராஜம்மாள். இந்த இசைக்கடலிலே 1919ஆம் ஆண்டுமார்ச் மாதம் 28ஆம் திகதி தோன்றிய முத்துத்தான் இசையின் இமயம் டி.கே. பட்டம்மாள். இவர் நான்கு வயதுக் குழந்தையாக மழலை கொஞ்சும் போதே, தந்தையிடமிருந்து மூகபஞ்சகதி கிருஷ்ண கானாமிருதம் போன்ற சுலோகங்களையும் முதற்குருவான தாயார் ராஜம்மாளிடமிருந்து பல தெலுங்குக் கீர்த்தனைகளையும் கேட்டு முறையாகக் கற்றுக் கொண்டார்.இவர் பச்சைக் குழந்தையாகப் பால் வடியும் அதரங்களால் பேசத் தொடங்கிய போதே, இனிமையாகப் பாடவும் செய்வார் என அறிகிறோம். அத்தகைய ஞானம் இயல்பாகவே கொடையாகக் கிடைத்திருந்தும்வரன்முறையாகச் சங்கீதத்தை ஒரு குருவிடம் பாடம் கேட்டுக் கற்கும் வாய்ப்பு இவருக்குக்கிட்டவில்லை.

எனினும், இசைத் துறையில் பல தடைகளை உடைத்தெறிந்த பெருமை இக்கலை வாணிக்கே உரியது. ஒன்று, இவருடைய மரபிலே உதித்த எந்தப் பெண்ணும் நாலு பத்துப் பேர் முன்னிலையில் மேடையேறிப் பாடும் முறை முன் எப்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகூடாத விடயம்.பெண்கள் மென்மையான பாடல்கள் கொண்ட மெல் இசையையே பாட வல்லவர்கள். இராகம், தாளம், பல்லவி, கல்பனாஸ் வரம் நிரவல் செய்து பாடும் கீர்த்தனைகள் போன்ற கஷ்டமான உருப்படிகளைப் பாட முடியாதவர்கள் என்றெல்லாம் சொல்லப்பட்ட கதைகளை ஒதுக்கித் தள்ளி,இசைத்துறையில் எத்தகைய கடினமான சங்கதிகளையும் நிரவல்களையும் வெகு சுத்தமாகவும், திறம்பட சுருதி பேசவும் இனிமையாக அற்புதமாகச் சங்கதிகளையெல்லாம் அடுக்கி உருட்டித்தள்ளுவார்.

திரை இசையின் பின்னணிப் பாடகராக முன்னணியில் இருந்த இவர், 'டூயட்' பாட்டுக்கள் பாடியதே இல்லை. திரையுலகிலும் வெளியேயும் இவர் பாடிய பாரதி பாடல்கள், தேசபக்தி கீதங்கள் என்பனவெல்லாம் மக்கள் மனதை உலுக்கி இனமொழிப் பற்றுக்கும், தேச விடுதலைக்கும் எழுச்சியூட்டும்சாதனங்களாகின. இசை பற்றி எவ்வித அருட்டுணர்வுமில்லாத சாதாரண மக்கள்கூட இவரின் இசை வல்லமையால் ஈர்க்கப் பெற்றனர். இவர் சிறுமியாக பள் ளியிலே படித்துக் கொண்டிருந்த போது, அப்பள்ளியின் தலைமையாசிரியை அம்முக்குட்டியம்மாள் என்பவர் இவருக்கு இயல்பாகவே கிடைத்துள்ள இசைப் பொக்கிஷத்தை உணர்ந்து கொண்டார். இவரின் திறமையை மேலும் வளர்க்க வேண்டுமென முயற்சி செய்தார். அதன் விளைவாகப் பல இசை மேதைகளுக்கு முன் இவரைப் பாடவைத்தார்.

இவருடைய இனிய கானத்தைக் கேட்டு மகிழ்ந்த பலருள் ஒருவரான அம்பி தீட்சிதர், இவரது திறமையை வியந்து பாராட்டி ஒருசில நாட்கள் தனது வீட்டில் வைத்தே இசை கற்பித்தார். அம்முக்குட்டி அம்மாளின் ஆர்வத்தால் அவரு டைய பாடசாலையில் நடை பெற்ற 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தில் இவர் பாடிய பாடலைக் கேட்டு மகிழ்ந்த ஒரு பெரியவர் உடனே நகைக் கடையொன்றிற்குச் சென்று தங்கப் பதக்கம் ஒன்றை வாங்கி வந்து இவருக்குப் பரிசாக அளித்தார். இச்சம்பவம் பத்திரிகையில் புகைப்படமாக வெளிவந்தது. அப்போது இவரது தந்தையார் தனது பெண்ணுடைய படம் பத்திரிகையில் வந்துவிட்டதே என்று பதறினார். காரணம் அக்காலத்தில் பெண்களின் படங்கள் பத்திரிகைகளில் வெளிவரும் வழக்கம் இல்லை. இது மகளின் எதிர்காலத்தை பாதிக்குமே என்று நினைத்தார். பன்னிரெண்டு வயதிலேயே இசைத் தட்டுகள் மூலம் இவரின் பாடல்கள் வெளியான போது, இவர் புகழின் உச்சியில் இருத்தப் பெற்றார்.



சில காலம் பேராசிரியர்சாம்பமூர்த்தி அவர்களிடமும் சில உருப்படிகளைத் கற்றார்; அப்படியே மெல்ல மெல்லமாக சிறிய மேடைகளில் பாடத்தொடங்கினார். இவரது பாட்டைக் கேட்டு ரசிப்பதற்கு மேலாக ஒரு பிரமாணப் பெண் பாடுகிறாளாம். போய் அவளைப் பார்ப்போமென அதிசயித்து அவரைப் பார்க்க வந்த சனத்திரளே ஏராளம்! ஏராளம்!! இப்படி குறிப்பிடுவதனால் அவரின் இசையின் தரம் குறைந்ததல்ல. அன்றைய சூழலின் தன்மையிலிருந்து அவர் வெளியே வர எவ்வளவு இடர்பட்டிருப்பார் என்பதை விளக் கவே இந்த விபரங்கள். எந்த நடிகைக்கும் குரல் கொடுக்காத இவர், தான் திரையில் பாடும் பாடல்களின் இராகத்திலும், வார்த்தைகளிலும் மிகச் சுத்தமாகவே பாடும் கட்டுப்பாடும் இறுக்கமும் கொண்டு கடைசிவரை அவற்றை நிலை நிறுத்தியவர். 'தியாக பூமி', 'நாமிருவர்' போன்ற படங்களில் இவர் பாடிய பாடல்கள் விடுதலை வேட்கைக்கு உந்துதலளித்தன. அழகாகவும் திருத்தமாகவும் தெளிவாகவும் கணீரென்ற வெண்கலக் குரலில் சொற்களை உச்சரிக்கும் பாங்கு மிகப்பிரமிப்பைஏற்படுத்தும்.

எந்தச் சபை சந்தியிலும் ஆண்கள் உணவு ண்ட பின்னரே பெண்கள் சாப்பிடும் பழக்கத்தையும், வீட்டின் உட்புறத்திலேயே மிக அமைதியாகவும் அடக்கத்தோடும் நாளாந்தம் பெண்கள் தம் நேரத்தைச் செலவழிப்பரென்றும் இவரது நேர்காணல் ஒன்றிலே பத்திரிகைக்குக் கூறியிருந்தார். அத்தனை அடக்கமாக வளர்க்கப்பட்ட இந்த கான சரஸ்வதியின் இனிய கானத்தைச் சுவைக்க நாட்டின் நாலாபக்கமுமிருந்து மக்கள் வெள்ளம் திரண்டு கூடுவது சர்வசாதாரண நிகழ்ச்சியாகும்.





இவரது இசையை விரும்பி ரசிக்கும், அரசு பணியிலிருந்த திரு. ஈஸ்வரன் என்பவரை 1940ஆம் ஆண்டு இவர் மணம் செய்தார். இவரது வளர்ச்சிக்கும் இசை வியாபகத்திற்கும் கணவரின் துணையும் மிக உதவியாக அமைந்திருந்தது. பத்மபூஷண்', 'கான சரஸ்வதி', 'இசைப்பேரறிஞர்', 'சங்கீத கலா சிகாமணி', 'சப்த கிரி', 'சங்கீத வித்வான் மணி' என ஏராளமான பட்டங்களையும் கௌரவங்களையும் பெற்ற டி.கே.ப., இசைத் துறையில் உண்மையாகவே வானளாவ உயர்ந்த இசை இமயமே தான். இத்தகைய இசைமேதையின் பிரிவு, இசையுலகிற்குப் பெரும் நஷ்டமேதான்!

பத்மா சோமகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரைக் கோவில் (LOTUS TEMPLE)



# 20 ஆம் நூற்றாண்டின் தாஜ்மஹால்

இந்தியாவின் டில்லியில் Lotus Temple என்று பிரபல மாக அழைக்கப்படுகின்ற Bahai (பஹாய்) வணக்க இல்லம் அமைந்துள்ளது. பஹாய் வணக்க இல்லத்தின் தோற் றம் தாமரை மலரை ஒத்ததாக அமைந்திருப்பதால் Lotus Temple என சிறப்பாக அழைக்கப்படுகிறது.

டில்லி நகருக்கு செல்கின்ற சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இவ்வணக்க இல்லம் திகழ்கிறது. இதன் கட்டட நிர்மாணப் பணிகள் 1987ஆம் ஆண்டு நிறைவுற்றதுடன் இந்திய உப கண்டத்தில் உள்ள கோவில்களுக் கெல்லாம் தாய்க் கோவிலாக (Mother Temple) இவ்வணக்க இல்லம் போற்றப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் கட்டடக் கலைக்காக வழங்கப்படு கின்ற எண்ணற்ற விருதுகளை இது வென்றுள்ளதோடு நூற்றுக் கும் மேற்பட்ட பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் சிறப்புக் கட்டுரை வடிவில் இடம்பிடித்த பெருமை இவ்வணக்க இல்லத் திற்கு உண்டு.

இவ்வணக்க இல்லத்திற்கு இன, மத, மொழி வேறுபாடு இல்லாமல் அனைவரும் சென்று வழிபட முடியும். எந்தவித மான கட்டுப்பாடுகளும் இல்லாமல் அமைதியைப் பேணுவ தன் மூலம் கடவுளை வணங்கும் இல்லமாக இது போற்றப்படு கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lotus Temple உட்பட அனைத்து பஹாய் வணக்க இல்லங்களும் குறிப்பிட்ட சில கட்டடக் கலையை மூலாதாரமாகக் கொண்டு கட்டப்படுவது மரபாகும். ஆனாலும் அவற்றில் சில பஹாய் வேதாகம நூல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வணக்க இல்லம் 9 கதவுகளைக் கொண்டதுடன் ஒரே நேரத்தில் 2500 பேரை உள்ளடக்கக் கூடிய வகையில் விசாலமான மாபிள் பதிக்கப்பட்ட மண்டபத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இவ்வணக்க இல்லத்திற்கு 2002 ஆம் ஆண்டு நிறைவில் 50 மில்லியன் மக்களை வசீகரித்த பெருமை உண்டு. 20 ஆம் நூற்றாண்டின் தாஜ்மஹால் என சிறப்பாக வர்ணிக்கப்படுகின்ற Lotus Temple இந்தியாவின் அரச கட்டடக்கலை தொழிற்றுறை கலை, கலாசாரம், சமயம் என பல துறைகளில் முக்கியத்துவம் பெற்ற இடமாகப் போற்றப்படுகிறது.


பயணிகள் சர்வதேச மற்றும் உள்நாட்டு விமானங்கள் மூலம் டில்லி விமானநிலையத்தை வந்து அடையலாம். அது மட்டுமன்றி வெளி இடங்களில் இருந்து யாத்திரிகர்கள் டில்லியில் உள்ள 3 முக்கிய புகையிரதநிலையங்களுக்கும் வந்து சேரலாம் (New Delhi Railway Station, Old Delhi Railway Station, Hazrat Nizamuddin Railway Station). தரைப்பாதையூடான போக்குவரத்து வசதிகள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் இருந்து டில்லி நகருக்கு உள்ளன. டில்லி நகரிலிருந்து உள்ளூர் போக்குவரத்து வசதிகள் மூலம் இவ் வணக்க இல்லத்தை அடையலாம்.


## Bahai House of Worship Lotus Temple Delhi

கட்டடப் பிரிவு :- வணக்கம் இல்லம்

வடிவமைப்பு :- ஈரானில் பிறந்து கனடா பிரஜா உரிமை பெற்ற Fariborz Sahba

கட்டி முடிக்க எடுக்கப்பட்ட காலம் :- 10 வருடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சென்னை இசை விழா
## -ஒரு கண்ணோட்டம்


கதிரி கோபால்நாத்


மதுரை டி. என். சேஷகோபாலன்

டிசம்பர் மாதப் இறுதியிலும் ஜனவரி மாத முற்பகுதியிலும் சென்னை இசை மற்றும் நடன விழா நடைபெறுகின்றது. இத்தகையதொரு மகத்தான கலை நிகழ்ச்சி, உலகில் வேறெங்கும் இடம்பெறுவதில்லை என்பதே இவ்விழாவுக்கு ஒரு தனிப் பெருமையாகும்.

மட்ராஸ் சங்கீத அகடமி 1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அதனை நினைவுகூரும் முகமாக ஆரம்பிக்கப்பட்டதே மார்கழி விழாவாகும். இந்திய தேசிய காங்கிரஸின் மட்ராஸ் மாநாட்டின் போது நடைபெற்ற அகில இந்திய சங்கீத மாநாட்டின் பெறுபேறாக 1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை சங்கீத அகடமி உருவாக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஒவ்வொரு டிசம்பர் மாதத்திலும் சிறிய அளவில் இந்த அகடமியினால் நடத்தப்பட்ட இசைவிழா, பின்னர் படிப்படியாக வளர்ந்து, மிகப் பிரமாண்டமான அளவில் நடத்தப்படுகிறது. ரசிகர்கள் இதனை ஆர்வத்துடன் வரவேற்பதற்கு குளிர்மையான காலநிலை நிலவுவதும், விடுமுறை தினங்கள் இருப்பதுவும் முக்கிய காரணமெனலாம்.

இந்த மாதிரியான இசைவிழாக்களை நகரில் உள்ள வேறு சங்கீத சபாக்களும் மேற்கொண்டு வருகின்றன. இசை மற்றும் நடனத்தில் மிகவும் புகழ் பெற்ற கலைஞர்கள் மட்டுமன்றி இளம் கலைஞர்களும் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் வழங்கப்படுவது இவ்விழாவின் தனித்துவ அம்சமாகும். விழாக்களை கண்டும், கேட்டும் ரசிக்க ஏராளமான ரசிகர்கள் உலகின் பல பாகங்களிலும் இருந்து சென்னை நகருக்கு வருகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டி. வி. சங்கரநாராயணன்



காயத்ரி கிரீஷ்



தனஞ்செயன், சாந்தா தனஞ்சயன்
குழுவினரின் நடனக் காட்சிகள்

ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகரில் டிசம்பர் மாதம் நடைபெறும் இசைவிழா உலகப் புகழ் பெற்றது. கடந்த எண்பத்திமூன்று ஆண்டுகளாக வெகு விமரிசையுடன் நடைபெற்று வரும் இவ்விசை விழாவில் இசைநிகழ்ச்சிகள், பாரம்பரிய நடனங்கள், செயல் விளக்க நிகழ்வுகள், இசையின் நுணுக்கங்கள் குறித்த காரசாரமான விவாதங்கள், ஆய்வாளர்களின் சொற்பொழிவுகள் என பல்வேறு பிரிவுகளில் நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜனவரி பதின்மூன்றாம் திகதி வரை நடைபெறும் இசை விழாவில், முன்னணி மற்றும் வளரும் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

காலையில் ஏழு மணிக்கு ஆரம்பமாகி, இரவு பத்து மணி வரை நிகழ்ச்சிகளை நடத்தும் சபாக்களும் இருக்கின்றன. மாலையில் மட்டும் கச்சேரிகளை நடத்தும் சபாக்களும் இருக்கின்றன. இதனை கருத்தில் கொண்டு பார்க்கையில், இந்த இசைவிழா நடைபெறும் நாற்பத்திநான்கு நாட்களில் இரண்டாயிரத்து தொள்ளாயிரத்திற்கும் மேற்பட்ட இசைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இத்தனை நிகழ்ச்சிகள் நடைபெறுவது உலகத்தின் வேறு எந்த பகுதியிலும் காண இயலாதது.

சென்னையில் பதிவு செய்யப்பட்ட சபாக்களின் எண்ணிக்கை நூறைக் கடந்தாலும், இந்த ஆண்டு எழுபதிற்கும் மேற்பட்ட சபாக்களே இசைநிகழ்ச்சிகளை நடத்தின. இதில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட முன்னணி மற்றும் வளரும் இசைக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள் பங்கேற்றனர். பாட்டுக் கச்சேரிகள், இசைக்கருவி நிகழ்ச்சிகள், இசைச் சொற்பொழிவு, பரதம், கதகளி, குச்சிப்புடி, ஒடிசி, கதக் உள்ளிட்ட பாரம்பரிய நாட்டிய நிகழ்ச்சிகள், மேளகர்த்தா ராகம் குறித்த நுணுக்கங்கள், சர்ச்சைக்குரிய விமர்சனங்கள் மற்றும் புதிய ரசிகர்களை உருவாக்குவது குறித்த காரசாரமான இந்த இசைவிழாக்களை நடத்தும் சபாக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே இருக்கும் அதே தருணத்தில் இசைகலைஞர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவில் அதிகரித்து வருகிறது. இளைய கலைஞர்களின் ஆதிக்கம் அதிகரித்துக்கொண்டே வருவது ஆரோக்கியமான வளர்ச்சி என்று கருதினாலும் ரசிகர்களின் எண்ணிக்கை உயரவில்லை என்பது கவலையான ஒரு விடயமாகும்.


ரசிகர்களை அதிகரிக்கச் செய்வதற்காக ஆய்வாளர்களால் முன்வைக்கப்படும் ஆலோசனையான, இசையை பாடசாலைகளிலேயே ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டு கற்பிக்கப்படவேண்டும் என்பது குறித்து அதனை நடைமுறைப்படுத்தும் நிலையில் உள்ளவர்கள் சிந்தித்து செயல்பட்டால் ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க இயலாது.

விவாதங்கள், ஆய்வாளர்களின் உரை, என பல நிகழ்வுகள் இடம்பெற்றன. உள்ளூர் ரசிகர்கள் மட்டுமல்லாது வெளியூர் மற்றும் வெளிநாட்டிலிருந்தும் ரசிகர்கள் குவிந்ததால் கலை வளர்ச்சியை நோக்கி நடைபோட்டது என்றே குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற விழாக்களில் அண்மைக்காலமாக தரம் குறைந்த கலைஞர்களுக்கு விருது வழங்கபடுவதால் கேள்விக் குறியாக்கப்பட்டிருக்கும் விருது வழங்கும் கலாசாரம் குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்னிறுத்தப்பட்டாலும், விருது வழங்கி கௌரவிக்கப் படுவதை ஒருமித்த கருத்துடன் அனைவரும் வரவேற்கின்றனர்.

ஒவ்வொரு சபாவும் ஆண்டுதோறும் இசைக் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் விருதுகளை வழங்கி வந்தாலும் இசைகலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளில் மியூசிக் அகடமி வழங்கும் சங்கீத கலாநிதி விருதிற்கு எல்லோராலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டிற்கு ஒரு கலைஞருக்கு தான் விருது என்ற கொள்கையே இதற்கு மூல காரணமாக இருக்கலாம்.



குழு நடனக் காட்சிகள்

இந்த இசைவிழாவில் மியூசிக் அகடமி, தவில் இசை கலைஞரான வலையப்பட்டி ஆர். சுப்ரமணியத்திற்கு சங்கீத கலாநிதி விருதை வழங்கி கௌரவித்தது. இந்த விருதைப் பெறும் முதல் தவிலிசைக் கலைஞர் இவர் என்பது தனிச் சிறப்பு. மியூசிக் அகடமி வழங்கும் விருதிற்கு இணையாக கருதப்படும் மற்றொரு விருது தமிழிசைசங்கம் வழங்கும் இசைப் பேரறிஞர் விருது. இந்த விருது இவ் ஆண்டு வாய்ப்பாட்டுக் கலைஞர் அருணா சாய்ராமிற்கு வழங்கப்பட்டது. எந்த மொழி பாடல்களை பாடினாலும், அந்த மொழிக்கேயுரிய உச்சரிப்பை பிசிறில்லாமல் பாடுவது இவருடைய சிறப்பாகும்.




குழு நடனக் காட்சிகள்

இசைக்கு மொழியில்லை என்று கூறி, ஒரு காலகட்டத்தில் தமிழைத் தவிர வேற்றுமொழிகளில் இசைக்கப்பட்ட சங்கீதத்தை, தமிழில் பாடி பிரபலப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மதுரை மணி அய்யர். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் என்ற தமிழ் புலவரிடம் மொழியைக் கற்ற மணி அய்யர், இலக்கண மற்றும் இலக்கிய சுத்தத்துடன் தமிழை உச்சரிக்கும் போது தமிழின் இனிமையை அனுபவித்தவர்கள் ஏராளமானோர்.

இன்றைக்கு சங்கீதமேடைகளில் பாடும் புலம் பெயர்ந்த மற்றும் வெளிநாட்டு வாழ் இந்திய கலைஞர்களின் நிகழ்ச்சிகளில் தமிழ் மொழிக்கான உச்சரிப்பு முழுமையாக இல்லை என்பது பரவலாக வைக்கப்பட்ட குற்றச்சாட்டு. இவர்கள் தமிழில் பாடவேண்டிய பாடல்களை ஆங்கிலத்தில் எழுதி வைத்துக்கொண்டு பாடுவதால் தான் இந்த நிலை என்று குறிப்பிட்டு சொன்னால், அதை கேட்டுக்கொண்டு தங்களை திருத்திக் கொள்ளாதவர்களே அதிகம் என்பதால் மொழியைப் பற்றி விமர்சிப்பதை விமர்சகர்கள் குறைத்துக்கொண்டுவிட்டார்கள்.




குழு நடனக் காட்சிகள்

கும்பகோணத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10TH ANNIVERSARY

LAE

Little Asia

EMPORIUM (Pvt) Ltd.

317, 317A, Galle Road, Wellawatta, Colombo 06.

T : +94 11 250 4470, 250 0098 | Fax : +94 11 2508934 | E : info@littleasia.lk | www.littleasia.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இசை விழா துளிகள்



### நாட்டிய மங்கை அலர்மேல் வள்ளி

ஒவ்வொரு இசை விழாவிலும், பிரதான சபாக்களின் முதன்மையான நேரங்களில் மட்டுமே ஆடுவதற்கு ஒப்புக்கொள்ளும் இவர் இந்த ஆண்டிலும் ஒன்றிரண்டு நிகழ்வுகளில் மட்டுமே பங்கேற்றார். நாட்டியத்தின் அரிச்சுவடி தெரியாதவர்கள் கூட ஒரு முறை இவரின் அபிநயத்தையும், வெளிப்படுத்தும் பாவனையும் பார்த்துவிட்டால்..... அந்த கணத்திலிருந்தே அவரும் கலாரசிகராகிவிடுவார். இது பலமுறை நிரூபிக்கப்பட்ட உண்மை. குறிப்பாக வாத்சல்ய பாவத்தில் அமைந்த 'கிருஷ்ணா நீ பேகனே...' எனத் தொடங்கும் பாடலுக்கு அவர் காட்டிய பாவனையும், முத்திரைகளும் அனுபவத்தின் முதிர்வை சுகானுபவத்தோடு எடுத்தியம்பியது எனலாம்.



### நாட்டிய மங்கை ஸ்ரீலதா வினோத்

புஷ்பாஞ்சலி முதல் தில்லானா வரை தன்னுடைய குருவின் புகழை அனுபவத்தாலும், அசுர சாதகத்தாலும் நிலைநாட்டிய நாட்டிய மங்கை ஸ்ரீலதா வினோத்



### நாட்டிய மங்கை ப்ரியதர்ஷினி கோவிந்த்

அடவுகளில் அங்க சுத்தத்தையும், முத்திரைகளில் தன்னுடைய குருவின் பாணியையும், பாவனையில் தன்னுடைய அனுபவத்தின் மூலமாக உணர்ந்ததை துல்லியமாகவும் உணர்த்தி, பார்வையாளர்களை மட்டுமல்லாமல் கலை ஆர்வலர்களையும் கட்டுக்குள் வைத்திருந்த நாட்டிய மங்கை ப்ரியதர்ஷினி கோவிந்த்



### நாட்டிய மங்கை வர்ஷா

இளம் கலைஞராக இருந்தாலும் ஜதியை அனுபவித்து காலபிரமானத்துடன் வழங்கி பரதத்தின் நுட்பமான அழகை கலை ஆர்வலர்க்கும், ரசிகர்களுக்கும் அளித்து பாராட்டைப் பெற்ற நாட்டிய மங்கை வர்ஷா



### நாட்டிய மங்கை தீபிகா

பரதக்கலை மீது தீரா காதலை அடுத்த தலைமுறை கலைஞர்களுக்கு வழங்கி வருவதில் கலையின் பல உள்ளடக்கங்களில் பிரதானமானது பாவனையுடன் கூடிய அபிநயம். இவ்விடயத்தில் பல மூத்த கலைஞர்களுக்கு சவால் விடும் வகையில் வளர்ந்து வரும் இளம் கலைஞர் .



### குச்சுப்புடி

பரதக்கலைக்கு இணையான புகழைப் பெற்ற மற்றொரு பாரம்பரிய நாட்டிய கலையான குச்சுப்புடியில் உள்ள தொழில் நுட்ப ரகசியங்களையும், பரதத்திற்கும் இதற்கும் இடையே உள்ள தொடர்பினை துல்லியமாக நிகழ்த்தி காட்டி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திய மணி குழுவினரின் குச்சுப்புடி நடனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டிய இசை நிகழ்வுகள்



**சீன நடனம்**

பாரம்பரிய கலைகளை பேணுவதில் பாரதத்திற்கு நிகரான வரானறை கொண்டது சீனா. அந்நாட்டின் வாழும் ஒரு பிரிவு பழங்குடியினரின் பாரம்பரிய நடனத்தின் சில காட்சிகள்.



**மாண்டலின் சீனிவாஸ்**

மாண்டலின் என்ற இசைகருவியோடு இணைந்தறியப்படும் இசை கலைஞர். கமகங்கள் அதிகமுள்ள கர்நாடக இசையின் இராகங்களை மாண்டலினில் வாசிப்பதில் வல்லவர். ஒவ்வொரு ஆண்டும் கர்நாடக இசையை ஏதேனும் ஒரு கோணத்தில் தன்னுடைய மெத்த அனுபவத்தின் மூலம் இசைத்து, ரசிகர்களை தக்கவைத்துக் கொள்வதில் தன்னிகரற்றவர். இங்கு கல்யாண வசந்தம் என்ற இராகத்தை எடுத்து விரிவாக இராக ஆலாபனையை செய்து, கல்பனா ஸ்வரங்களோடு இசைத்தபோது.... பரவசத்தில் வார்த்தைகள் வராமல் இருந்த தருணங்களே அதிகம்.



**சிக்கில் குருசரண்**

பூர்விகல்யாணி இராகத்தை சுருக்கமாக ஆலாபனை செய்ததிலேயே இவரின் இசைஞானம் புலப்பட்டது. இராக ஆலாபனையில் கல்பனா ஸ்வரங்களில் சஞ்சாரம் செய்யும் போது அதை ரசிக்கும் ரசிகர்களையும் தன்னுடனேயே அழைத்துச் செல்லும் பாங்கு வியப்பில் ஆழ்த்தியது.



**அருணா சாய்ராம்**

சென்னை தமிழிசை சங்கம் வழங்கும் சங்கீத பேரறிஞர் விருதினை இந்த ஆண்டிற்காக பெற்றவர். அதற்கு முற்றிலும் தகுதியானவர் போல் அனைத்து தரப்பு ரசிகர்களையும் தன்னுடைய குரலினிமையால் கட்டிபோட்டவர்.



**நித்யஸ்ரீமகாதேவன்**

நாளுக்கு நாள் தொழில் பக்தி அதிகரித்துக்கொண்டே செல்வதால் அவரிமிருந்து வெளிப்படும் குரல் வழி தொழில் நுட்பங்களும் மெச்சும்படியே இருக்கின்றன. இந்த சீசனில் கிட்டத்தட்ட எல்லா பிரதான சபாக்களிலும் பாடியவர் என்ற பெயரை பெற்றதன் பின்னணியில் அவரின் அசுர சாதக பயிற்சி கைக்கொடுக்கின்றன என்பதை யாரும் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.



**ஜி. ரவிகிரண்**

இளம் பாடகர். மேல் சுருதியில் நிக்கும் போதும், சஞ்சாரம் செய்யும் போது அவர் எண்ணியபடியெல்லாம் அவருக்கு அவருடைய குரல் ஒத்துழைக்கிறது. தொடர்ச்சியாக அசுர சாதகம் செய்தால் இசையுலகில் முன்னணி இடத்தை பிடிப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



**சுதா ரகுநாதன்**

கர்நாடக இசையின் அடையாளமாகவே மாறிவருகிறார் என்று சொல்லாம். பாரதியின் பாடல்கள் இவரின் குரல் வழியாக வெளிப்படும் போது கிடைக்கும் புத்துணர்விற்கு ஈடாக எதுவுமில்லை என்றே சொல்லாம். இவருக்கு போட்டி இவரே தான் என்பது போல, யாரும் தொட முடியாத - தொட தயங்கும் இராகத்தை எடுத்து, அதில் கல்பனா ஸ்வரங்களோடு சஞ்சாரம் செய்யும் போது, இவரை நாம் பாராட்டுவது குறைவு தான் என்று தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக் கோலங்கள்

*'அஞ்சு வயது மகள் கோலமிட்டால் அழகில்லை என்று அழிக்கும் தாயாருண்டோ '*
*- கவிமணி*



தமிழரின் அன்றாட வாழ்வில் ஓர் அம்சமாக விளங்கும் அழகுக் கலை கோலமாகும். கோலம் என்றாலே அழகு என்று அர்த்தம். அதாவது கலை உணர்ச்சியுடன் நம் உணர்ச்சியை அழகுற வெளிப்படுத் துவதுவதாகும் என்று கூறு கிறார் திருமதி கீதா பாக்கியநாதன் என்ற குடும்பத் தலைவி.

இவர் வெள்ளவத்தைப் பகுதியில் சன நெரிசல் மிக்க பகுதியில் வசித்தாலும் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் வீட்டு வாசலில் கோலம் போடத் த வறுவதில்லை. கோலத்தின் பெருமைகளையும் சிறப்புகளையும் நன்குணர்ந்த இவரிடம் உரையாடி யபோது கிடைத்த தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். தமிழ் பெண்களின் கற்பனைத் திறனையும், கைத்திறனையும் இன்று வரை தொடர் மரபாக விளக்கி வருபவை தமிழர் மண்ணின் அழகிய கோலங்கள்தான். பண்பாட்டு நாகரீக வளர்ச்சியுடைய சமுதாயத்தில்தான் இத்தகைய அழகிய சித்தரிப்புகள் உருவாகும். முன்னோர், பின்வந்தோர், இன்றுள்ளோர் அனைவருமாக உருவாக் கியிருக்கும் இந்த அரிய கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமை யாகும். நாம் போடும் கோலங்கள் நமக்கு வாழ்க்கையில் எல்லாவிதமான நலன்க ளையும் தருகிறது. கோலமிடுவதால் நல்ல சிந்தனைத் தெளிவும் ஒருமுக நோக் கும், தேக ஆரோக்கியமும் கிடைக்கும்.

இன்று கணனி மூலம் போடும் கோலம் கூட வந்து விட்டது. கணனிக் கோலம் பார்ப்பதற்கு அழகுதான். ஆனால், மாக்கோலம், அரிசி மாவில் போடும் கோலத்திற்கு இது ஈடாகாது. அரிசிமாவினால்தான் கோலம் போட வேண்டும்.

## கோல சாஸ்திரம்

- சூரியன் உதிப்பதற்கு முன் வாசல் கூட்ட வேண்டும். சாணம் இல்லாமல் வெறும் தண்ணீர் வைத்து தெளிக்கக்கூடாது.
- ஆள்காட்டி விரலை நீக்கியே கோலம் போட வேண்டும்.
- போடுகிற கோடு தெற்குப் பக்கமாக முடியக்கூடாது.
- இரட்டை இழை கோலங்கள்தான் போடவேண்டும். அசுபக் காரியங் களுக்குத்தான் ஒன்று அல்லது மூன்று இழைக் கோலங்கள் போடலாம்
- அரிசி மாவில் தான் கோலம் போட வேண்டும். அதை வந்து தின்னும் காக்கை மற்றும் எறும்புகள் முதலியன நமக்காக ஆண்டவனிடம் சிபாரிசு செய்யும் என்பது ஐதீகம்.
- பகலவன் எழுமுன் வாசலை கூட்டி, பசுஞ்சாண நீரால் தெளித்துக் அரிசிமாக் கோலமிடுதலால் இந்தப் பிறவியின் துன்பத்தை நீக்கலாம்.
- வாசலில் கோலம் போடும் போது நல்லவற்றை நினைத்துக் கொண்டு தூய எண்ணத்துடன் போட வேண்டும்.
- கோலத்தை ஒரு போதும் தாண்டக் கூடாது.
- செம்மண் (காவி) இட்டு கோலம் போடுவதால் கண் ஊறு அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலம் போடும் முறை



கோலங்கள் அரிசிமா, முருகைக்கற்தூள் போன்ற வெண்ணிற உலர்வான தூள்களைக் கொண்டு வரையப்படுகின்றன. பொதுவாக வெளியே தளர்வான மண்தரையாயின், நீர் தெளித்துப் புழுதி அடக்கப்படும். பின்னர் பெருவிரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் சிறிதளவு உலர் தூளை எடுத்து, விரல்கள் நிலத்தில் படாமல், நிலத்துக்கு அரையங்குல உயரத்திலிருந்து, ஏற்கெனவே எண்ணியபடியான வடிவம் கிடைக்கும் வகையில், தூளைத் தூவிச் செல்ல வேண்டும். பசுஞ் சாணம் முதலியவற்றால் மெழுகப்பட்ட மண் தரையிலோ அல்லது வேறு இறுக்கமான தரையிலோ கோலம் வரைவதாயின், சிலவேளைகளில் அரிசியை நீர்விட்டுப் பசைபோல் அரைத்து, பின்னர் வேண்டிய அளவு நீர் விட்டுக் கரைத்து, அதை ஒரு துணியில் தோய்த்துக்கொண்டு விரல்களுக்கிடையே மெதுவாக வைத்து அழுத்த விரல்களில் வடியும் மாக்கரைசலினால் பேனாவால் வரைவதுபோல் கோலம் வரையலாம். காய்ந்த பின்னர் இது நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக்கூடியது.

கோலங்களை அவை வரையப்படும் முறையை ஒட்டி இரண்டு பிரிவுகளாக வகுக்க முடியும்.

1) **கம்பிக் கோலங்கள்:** கம்பிக் கோலங்கள் என்பன கோடுகளை எளிமையான வடிவில், ஒழுங்குகளில் வரைவதன் மூலம் அழகிய சீரான வடிவங்களைப் பெறுதலைக் குறிக்கும்.

2) **புள்ளிக் கோலங்கள்:** புள்ளிக் கோலம் என்பது, கோடுகளை வரையும் முன், வழிகாட்டல் புள்ளிகளை இட்டுக்கொண்டு அதன் அடிப்படையில் வடிவங்களை வரைவதாகும். கிராமங்களில் வாசலைப் பசுஞ்சாணம் கலந்த நீர் தெளித்துக் கோலமிடுவர். முற்காலத்தில், பசுஞ்சாண நீர் தெளித்து கோலமிட்டது பாம்பு போன்ற விஷப் பூச்சிகள் உள்ளே வராமல் தடுப்பதற்காகும்.

வீட்டிலுள்ள ஏனைய உறுப்பினர்கள் காலையில் எழுந்து வாசலுக்கு வந்து கோலத்தைப் பார்க்கும் போது அவர்களின் மனதிற்கு சந்தோஷமாக இருக்கும். இது குடும்பத்தை குதூகலமாக வைத்திருக்க உதவும். பண்டிகைக் காலங்களில், அதாவது புதுவருடப்பிறப்பு, தீபாவளி, பொங்கல் போன்ற நாட்களில் பெரும்பாலான தமிழர் வீடுகளில் கோலம் போடுவார்கள். இந்த நாட்களில் அரிசிமாக்கோலம் போடுவது எறும்பு முதலிய ஜீவராசிகளுக்கும் உணவாகிறது. இவை தேவ தூதர்கள். அதாவது நமக்காக இறைவனிடத்து நல்லது நடக்குமாறு வேண்டுவனவாம். தற்காலத்தில் அடுக்கு மாடி வீடுகள் அதிகம் இருப்பதால் வாசலில் இடவசதி குறைவு. எனவே ஸ்ரிக்கர் கோலங்கள் பெருகி விட்டன.

வாசல் படியிலும் கோலம் போடுவது மிகவும் நல்லது. கோலத்தில் மாக்கோலம், நவதானியக் கோலம், ரங்கோலிக்கோலம், நீர்க்கோலம் ஆகிய வகைகள் காணப்படுகின்றன.

கோலம் என்றாலே எல்லோரும் சங்கு கோலம், மயில் கோலம், கத்திரிக்காய் கோலம், ரோஜா கோலம் என்று சில வழமையான கோல வகைகள் இருக்கின்றன. இவையெல்லாம் பல யுகங்களாகப் போடப்பட்டு வருகின்றன. சிலர் கண்ணிமைக்கும் நேரத்தில் கத்திரிக்காய் கோலம் போட்டு விடுவார்கள். அவ்வளவு பிராக்டிஸ். என்னதான் விதம் விதமாகக் கலர் கோலங்கள் போட்டாலும், எனக்கு எப்போதும் கம்பிக் கோலங்கள் தான் பிடிக்கும். கம்பி கோலங்கள் தான் ஒரு கோல வல்லுனரின் நிபுணத்துவத்தை பறைசாற்றுவது போல இருக்கும். என்னிடம் இருந்த கலெக்ஷனிலேயே மிகவும் கடினமான கம்பிக் கோலங்களைக் கண்டுபிடித்து, அவற்றையெல்லாம் பழகி, போடுவேன்.

ஓலைக்குடிசையானாலும் சரி, பெரிய வீடானாலும் சரி, அழகான கோலம் போட்டு, குத்து விளக்கேற்றி வைத்தால் அந்த வீட்டில் திருமகள் குடியிருப்பாள். இந்தக் கோலக் கலை மிகவும் பெருமையுடையது. தெய்வங்களோடும், நாட்டோடும் பொருந்திப் போகிறது. உங்கள் மகளை கோலம் போடச் செய்யுங்கள். அவள் கோலமாவுடன் இருக்கும் போது, உங்கள் மனம் சந்தோஷத்தில் துள்ளும் என்கிறார் கீதா பாக்கிய நாதன்.

**அமலகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேமன் கவி கவிதைகள்

## இப்பொழுதே சொல்!

உன்னில் இன்னும் நிலவும்
ஆதிக்கத்தை நான் அறிவேன் !
என்னில் புதைந்து கிடக்கிறாய் நீ!
போதை வஸ்துவில் மூழ்கிப் போன
ஒரு மூளையின் சடலமாய், என் சகல உறுப்புக்களாலான
உன் மீதான எனது அராஜகம்தான்
எனது கம்பீரம் எனும் உணர்வே
என் வேருக்குக் கர்வம் தருகின்றது.

நீ சிதையத்தான் வேண்டும் !
நீ சிதையத்தான் வேண்டும் !

என் ஆத்மாவின் நாவில் சுரக்கும்
தாக வெறிக்கான சகல நிவாரணி
உன் சிதைவுகள்,

நீ என்னை வக்கிரத்தின் பிரதிநிதி எனச் சொல்லலாம்
நீ என்னை சதை வெறியின் சங்கீதமெனச் சொல்லலாம்
எனக்கு என் தணிப்பின் மீது மட்டுமே ஆர்வம்.

என் சரீரத்தின் உன் சுவாசம்கூட உயிர்ப்புடன் இல்லை.
என்பது புரியும் எனக்கு.

எந்தவொரு தடுப்புச் சுவராலும்
தடுக்க முடியா இந்த உணர்ச்சிப் போரில்
இறுதி வெற்றி
என் பக்கம் என்பது உனக்கு மறக்க முடியாத
ஒரு கால பாடமாய் இருக்கிறது இல்லையா ?

நீ வீரத்தால் பிதுங்கி நிற்பது போலான
ஒரு மாய வலையை என்மீது வீசிய
வரலாற்றின் ஆதிக்கக் கரங்கள்
என்னை பிளந்து விட்டன.
அந்தப் பிளவில் நிகழப் போகும்
உன் வீரிய வீழ்ச்சியின்
வருகையை அறியாமல்

இப்பொழுது சொல்!,
யாரை யார் ஆள்கிறார்கள் ?
யாரை யார் சுரண்டுகிறார்கள் ?
யாரில் யார் வீழ்கிறார்கள் ?
இப்பொழுதே சொல்!

## பயணம்

வெளி அடைபட்டு
இருந்தது
மனித பிண்டங்களால்;
நின்ற நிலையிலும்
இருந்த நிலையிலும்;

நெரிச்சலும் எரிச்சலும்
அங்கும் இங்குமாய்;

பலவிதமான உடல்களின்
உஷ்ண மூச்சுகளின்
சங்கமம்;
உணர்ச்சிகளை கிளறிக் கொண்டும்
உணர்வுகளை கீறிக் கொண்டும்;

ஊறும் வியர்வையின்
ஈரலிப்பில் கலந்த நிலையில்;

பயணம் எனும் பேரில்
நன்றாக அடைக்கப்பட்ட
ஓர் இயந்திர பொதியில்
காற்றை கிழித்துக் கொண்டு
வீசப்பட்டுக் கொண்டிருந்தது
இருப்பின் தொகையாக!

## பிரச்சினையும் தீர்வும்

பிரச்சினை-
தீர்வின் கருவறை!
தீர்வு-
பிரச்சினையின் கல்லறை!


பிரச்சினையின் பொழுது
தெரிகின்ற தீர்வு
கானல் நீர்!
எட்டிய தீர்வு
கையில் மிஞ்சும்
அசல்!

பிரச்சினை-
பிறரை உனக்கு காட்டும்!
தீர்வு -
உன்னை பிறருக்கு காட்டும்!

தேவையான பேச்சு
தீர்வின் தாய்!
தேவையற்ற பேச்சு
பிரசங்கியின் தாரம்!

பிரச்சினை சிறை!
தீர்வு விடுதலை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உலகின் முன்னணி விமான சேவை, உலகம் பூராவும் 55க்கும் அதிகமான இடங்களுக்கு பறக்கிறது***

ஜனவரி மாதம் தொடக்கம் உங்கள் விருப்பத்திற்குரிய அமெரிக்க நகரங்கள் உள்ளிட்ட 55 க்கும் அதிகமான உலகளாவிய சேருமிடங்களுக்கு நீங்கள் பறக்க முடியும். சிக்காக்கோ மற்றும் நியூயோர்க் ஆகிய நகரங்கள் முன்னெப்போதையும்விட இப்போது உங்களுக்கு மிக நெருக்கமாக உள்ளன. லொஸ்ஏஞ்சல்ஸ், சான் பிரான்சிஸ்கோ, ஹூஸ்டன், வாஷிங்டன் DC, பொஸ்டன், டலாஸ் மற்றும் மியாமி ஆகிய நகரங்களுக்கு எமது பங்காளிகளான அமெரிக்கன் எயார்லைன்ஸ் விமானச் சேவையுடன் இணைந்து பறக்கிறோம். அதிக சௌகரிகம் மிக்க ஆசனங்கள், காலை நீட்டுவதற்கான இடவசதி, பரந்துபட்ட உணவு மற்றும் பானங்களைத் தெரிவு செய்யும் வசதி மற்றும் விமானத்தில் மிகப்பெரிய திரைகளில் 600 மணித்தியாலங்களுக்கும் மேலான களிப்பூட்டல் வசதிகள் என்பன எமது விமானங்களில் கிடைக்கின்றன. நீங்கள் எவ்வாறு சந்தோஷமாக ஆகாயத்தில் பொழுதை கழிக்கப்போகிறீர்கள் என்பது உங்களைப்பொறுத்த விடயமாகும். அதிக தெரிவுகள், அதிக சுதந்திரம், பாரிய வசதிகள்.

**நாம் இதனை தூண்டப்பட்ட சேவை என அழைக்கிறோம். நீங்கள் இதனை விமானப் பயணத்துக்கான சிறந்த வழி என அழைப்பீர்கள்.**

*2009 ஆம் ஆண்டுக்கான உலகப் பயண விருதுகள்

etihadairways.com   ✆ +94 11 4766500

அபுதாபியில் இருந்து உலக நாடுகளுக்கு

الاتحاد
ETIHAD
AIRWAYS

ஐக்கிய அரபு எமிர் இராச்சியத்தின் தேசிய விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

## கருங்கல் சிவாலயமாக சிறப்புற்று மிளிர்கிறது

இலங்கையில் தனிப் பெரும் கருங்கல் சிவாலயமாக விளங்கும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் தேசிய வீரராகப் புகழ்பெற்ற சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் கட்டப்பட்டது. 1906 ஆம் ஆண்டில் இவ்வாலயத்தின் கருங்கல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1915 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

சேர். பொன்னம்பலம் இராமநாதனின் தந்தையார் ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் 1857ல் கட்டிய சிறிய சிவாலயம் இருந்த இடத்தில் தான் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புதிய ஆலயம் அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சிதம்பரம் உட்பட பிரசித்தி பெற்ற சிவாலயங்களுக்கு விஜயம் செய்து தரிசித்த சேர் பொன்னம்பலம் இராமநாதன், தமது பெருவிருப்புக்கிணங்க அந்த ஆலயங்களுக்கு ஒத்ததாக இந்த ஆலயத்தினை உருவாக்க ஆர்வம் கொண்டு தென்னகத்திலிருந்து சிற்பாசாரியார்களைக் கொண்டு வந்து ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை நிர்மாணித்தார்.

முற்றிலும் கருங்கற்களினால் சிவாகம முறைப்படி கட்டப்பட்ட இவ்வாலயம் சிறந்த கட்டிடக் கலைக்கு உதாரணமாக அரிய சிற்பக் கலைச் சிறப்போடு விளங்குவது எமக்குப் பெருமை அளிப்பதாகும்.அம்பாள் கோபுரம் மூன்று தளத்தைக் கொண்டதாகவும் பிரதான கோபுரம் 5 தளத்தைக் கொண்டாகவும் இருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்தம்ப மண்டபம்

நுழைவாயில் கோபுரத்தின் நடுவில் சிவபெருமானும் உமா தேவியாரும் இடபாரூடராகக் கட்சி தருவதை தரிசிக்கலாம். அதேபோல் மேற்குப் பகுதி கோபுரமும் விளங்குகிறது.

5 தளம் கொண்ட பிரதான கோபுரத்தில் சிவாம்சங்கள் கொண்ட சிற்பக் கலைகளின் நுட்பத்தில் சிவன் - பார்வதி திருமணம், சிவபிரான், அம்மன், முருகன், பிள்ளையார் வடிவங்களையும் தரிசிக்கலாம்.

கோபுரத்தின் தெற்குப் பகுதியை நோக்கினால் சிவபெருமானின் யோக வடிவான ஸ்ரீ தட்சணாமூர்த்தியின் வடிவங்களைக் காணலாம்.

கோவிலின் உள்ளே தரை, சுவர், தூண், கோவில் மேற்பாகம் ஆகிய யாவும் கருங்கல்லினால் கட்டப்பட்டவையாகும்.

வெளி வீதியில் இருந்து கோவில் மேற்பாகத்தை பார்க்கும்போது அங்கே இருமருங்கிலும் யானைகள் மேற்பாகத்தை தாங்கி நிற்கின்றன. மேற்குப் பாக 4 பகுதிகளிலும் சிவ பூதகணங்கள் கோவிலை காக்கின்றன. இப்பூத கணங்களுக்கு அருகே சிவத்தியான வடிவம் கொண்ட இடபதேவர் (ரிஷி தேவர்) காணப்படுகிறார்.

கோவிலின் உள்ளே தூண்கள் கொத்தல் வேலை, செதுக்கல் வேலை கொண்ட சிற்பக் கலை நுட்பங்களைக் காண முடியும். பல இடங்களிலே கமல வடிவம் கொண்ட வேலைப்பாடுகளை நோக்க முடியும். தூண்களின் மேற் பகுதியிலே கற்சிங்கங்களைக் காணலாம். அதன் சிரசின் மேல் கல் தீராந்தி உள்ளது. தீராந்திகளில் தான் இக் கோவிலின் மேற்பாகம் தங்கி நிற்பது சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விநாயகர் சந்நிதானத்தை நோக்கி அமைந்த மண்டபம்



ஆலயத்தின் மேற்குப் புறத்தே பிள்ளையார் கோவில், சோமாஸ்கந்த மூர்த்தி, பஞ்ச லிங்கம், மகாலிங்கங்கள், முருகப் பெருமான் ஆலயங்கள் தனித் தனிச் சந்நிதானங்களாக உள்ளன. தனித் தனிச் சந்நிதானம் கொண்ட தேவ சந்நிதானம் என்பதால் இவற்றின் முன்பாகவுள்ள கல்தூணில் சிவ பூத கணங்கள் தமது சிரசின் மீது கல் தீராந்தியை தாங்கி நிற்கும் சிற்ப நுட்பத்தையும் அதற்கு மேலே கோவில் மேற்பாகம் இருப்பதையும் காணலாம்.

தூண்களின் நடுப்பாகத்தில் ஆங்காங்கே யானை, ஒற்றைத் தலை நாகம், இரு தலை நாகம், ஐந்து தலை நாகம், கிளி, அன்னம் முதலிய பல்வேறு வன சீவராசிகளைக் காண முடியும். இங்கே சிறப்பம்சமாகக் கூறக் கூடியது, தனக்கு எட்டாத மரக்கிளையை யானை லாவகமாக முறிக்கும் காட்சியாகும். பல்வேறு இடங்களில் ஆடும் மயிலைக் காணலாம். சூரிய சந்திரர்களைக் கூட இக் கற்றூண்களில் காண முடியும். இதிகாச புராணக் காட்சிகளையும் இத் தூண்களில் தரிசிக்கலாம்.

அரிய கட்டிடக் கலை நுட்பத்தையும் சிற்பக் கலை நுட்பத்தையும் கொண்டு விளங்குகின்ற இப்பிரசித்தி பெற்ற ஆலயத்தில் இந்து மக்கள் மாத்திரமின்றி ஏனைய இனத்தவரும் வழிபாடியற்றி அமைதி பெற்று வருவது கண்கூடாகும். சேர் பொன். இராமநாதன் குடும்பத்தினரால் மேற்பார்வை செய்யப்பட்டு வரும் இவ் வாலயத்தின் தற்போதைய மேலாளராக அன்னாரின் வழித்தேன்றலான ஸ்ரீமான் டி.எம். சுவாமிநாதன் அவர்கள் சேவை புரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல்களை தந்து உதவியவர்:**
**இந்து வித்தியாநிதி, பிரம்மஸ்ரீ சோ.குகானந்த சர்மா**
**ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், கொழும்பு.**

**தொகுப்பு:அன்னலக்ஷ்மி இராஜதுரை**




தூணில் காணப்படும் சிற்பங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுச்சிபெறும் வடக்கில் பரவிடும் புதிய ஒளி

## மக்கள் வங்கியானது தனது ஐந்து புதிய சேவை நிலையங்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கிறது.

"மக்கள் மனமறிந்த வங்கி" என மக்களின் பேரபிமானத்தை வென்ற மக்கள் வங்கியானது கடந்த 48 வருடங்களாக இலங்கைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடுவதற்காக வழங்கிவரும் சேவைகள் ஏராளம்.

அன்றுபோல் இன்றும் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கைக்கு கைகொடுக்கும் நோக்கத்தில் மக்கள் வங்கி ஆற்றிவரும் அர்ப்பணிப்புமிக்க பணிகள் சொல்லில் அடங்காதவை.

இவ் வங்கி வலையமைப்புச் சேவைகளை மேலும் இலகுவாக முன்னெடுத்துச் செல்ல, ஐந்து புதிய சேவை நிலையங்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியின் தலைவர் திரு.டபிள்யூ. கருணாஜீவ அவர்கள் மற்றும் மக்கள் வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் திரு.பி.வி. பத்திரன ஆகியோரின் தலைமையில் நவம்பர் 7ம் திகதி சனிக்கிழமை பின்வரும் இடங்களில் மக்கள் வங்கியின் சேவை நிலையங்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

- **யாழ்ப்பாணம் நாவலர் வீதி சேவை நிலையம் - 354, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
- **பண்டத்தரிப்பு சேவை நிலையம் - பிரதான வீதி, பண்டத்தரிப்பு.**
- **புலோலி சேவை நிலையம் - யாழ்ப்பாண வீதி, புலோலி தெற்கு, புலோலி.**
- **கல்வியங்காடு சேவை நிலையம் - 978, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம்.**
- **கோப்பாய் சேவை நிலையம் - 102, பருத்தித்துறை வீதி, கோப்பாய்.**

**காங்கேசந்துறைக் கிளை புதிய முகவரிக்கு இடம் மாற்றம் செய்யப்படுகின்றது.**

**தனது வாடிக்கையாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள மக்கள் வங்கியானது மேலதிக வசதி கருதி, அதே தினத்தில் தனது காங்கேசந்துறை கிளையை இல.312, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் புதிய முகவரிக்கு இடம்மாற்றுகிறது. அத்துடன் தன்னியக்க ATM வசதியுடன்கூடிய துரிதமான பல்வேறு சேவைகளும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.**

2006 2007 2008 | 2008 | 2009 | 2009


www.peoplesbank.lk

AA⁻ Brand Finance Rating, A(lka) Fitch Rating

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிர் எடுத்தலும் பொங்கலும்

## – யாழ் மண்ணின் மரபு

இலங்கையின் வட பாகத்தில் யாழ்ப்பாணம் மூன்று பக்கம் கடலாலும் ஒரு பக்கம்தரையோடும் தொடர்புபட் டமையினால் குடா நாடு என சிறப்பாக அழைக்கப் படுகிறது. இலங் கையின் மற்றைய பாகங்களில் வசிக்கும் மக்களுக்கும் யாழ்ப் பாணத்து மக்களின் கலை, கலாசார, வாழ்வியல் முறைகளுக்குமிடையில் அதிகளவு வேறுபாடுகள் உள்ளன.

அந்தவகையில் தமிழர் திருநாளாம் தைத்திருநாள் பற்றியும் தைப்பொங்கலோடு காலங்காலமாக தொடர்புபட்ட புதிர் எடுத்தல் பற்றியும் குறிப்பிடுகிறோம் வருட இறுதிக் காலாண்டுப் பகுதியில் மாத்திரம் அதிகளவான மழைவீழ்ச்சி பெறும் மாவட்டமாக யாழ் மாவட்டம் உள்ளது. மழைவீழ்ச்சி கிடைக்கும் வருட இறுதிக் காலாண்டுப் பகுதியிலே இம்மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் வளத்தைக்கொண்டு விவசாயச்செய்கைகள் அதிகளவு இடம்பெறுவதோடு இம்மாவட்ட மக்களுடைய பிரதான உணவாக அரிசி இடம்பிடிக்கிறது.

புரட்டாதி மாதம் முடிவடைந்த பின்னர் மழைவீழ்ச்சி ஆரம்பமாகும் நேரத்தில் யாழ் விவசாயிகள் தங்கள் நிலங்களை பண்படுத்தி வைத்திருப்பார்கள். தங்கள் உழைப்பைக் கொண்டு உழுது, விதைத்து, களையெடுத்து, பசளையிட்டு தாங்கள் வளர்த்த நெற்பயிரை ஆசையோடு அரவணைப்பார்கள்.

தமிழில் தை மாதம் முதலாம் திகதியை தைப்பொங்கல் தினமாக கொண்டாடும் வழக்கம் தொன்றுதொட்டு தமிழர் களிடையே உள்ளது. இதற்கு யாழ் மாவட்ட மக்களும் விதிவிலக்கல்ல. அவர்கள் தைப்பொங்கலுக்கு முதலில் ஒரு நல்ல நாள் பார்த்து 'புதிர் எடுத்தல்' நிகழ்வை நடாத்து வார்கள். குடும்பத்தலைவர் குறிப்பிட்ட நல்ல நாளில் காலையில் நெற்கதிர்களை அறுப்பதற்கு பொன் என மின்னும் நெல் வயலுக்குச் செல்வார். குடும்பத்தலைவர் வயல் வரம்பில் முதற் கடவுளான பிள்ளையாரை வைத்து, பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றை வைத்து தேங்காய் உடைத்து கடவுளை வணங்கி அதன் பின்னர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி வீட்டுக்குக் கொண்டு செல்வார். இதேநேரம் குடும்பத் தலைவி புதிர் வாங்குவதற்கு தயாராக இருப்பார்.

தலைவன் கொண்டு வருகின்ற நெற்கதிர்களை மனையாள் வாங்கி சாமியறைக்கு கொண்டு செல்லும் வழக்கம் உண்டு. அதன்பின்னர் கடவுளை வணங்கி மாவிலைகொண்டு புதிய நெற்கதிர்களை சாமியறை மற்றும் சமையல் அறைக்ளில் கட்டித் தொங்கவிடு வார்கள். மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி தைத்திருநாளுக் காக காத்திருப்பார்கள்.


பாடுபட்டு உழைத்து அந்த உழைப்பின் மூலம் வளர்ச்சி அடைந்த நெற்கதிர்களை நல்ல நாளில் 'புதிர் எடுப்பதன் மூலம் வருடம் முழுவதும் குறைவில்லாத உணவுச் செல்வம் கிடைக்கும் என்பது அவர்களுடைய நம்பிக் கை யாகும். தைத்திருநாள் என்பது உழவுக்கு உதவிய சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளாகும். யாழ்ப் பாணத்து மக்கள் தைப்பொங்கலுக்கு உரிய ஆயத்தங்களை முதல் நாளே தொடங்கிவிடுவதோடு முதல் நாள் நடைபெறும் சந்தை முக்கியமான ஒரு சந்தையாக கருதப்படும். இதைப்பொங்கல் சந்தை என சிறப்பாக அழைப்பார்கள்.

பொங்கலுக்குத் தேவையான பொருட்கள் தங்களிடம் இருந்தால். அதை சந்தைக்கு கொண்டு சென்று விற்று விட்டு தமக்குத் தேவையான பொங்கல் பொருட்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.





வாங்குவார்கள். புதுப்பானை, புதுஅரிசி, சர்க்கரை, பயறு, தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, சாம்பிராணி, கற்பூரம், கரும்பு, இஞ்சி, மஞ்சள் போன்ற பொருட்கள் யாழ் மக்களுடைய பொங்கலில் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன.

தைத்திருநாள் அன்று அதிகாலை விழித்தெழுந்து, குளித்து, வீடு பெருக்கி, கழுவி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி, அதில் உலக்கை வைத்து அரிசி மா மற்றும் செங்கட்டியால் கோலம் போடுவார்கள். நாற்சதுரமாக நாற்புறம் வாசல் வைத்து அந்த கோலம் போடும் பழக்கம் அவர்களிடம் உண்டு. கோலத்தின் நடுவில் ஒரு மூலையில் மூன்று கல் வைத்து அடுப்பைத் தயார்ப்படுத்துவார்கள். குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி நிற்க பிள்ளையார் பிடித்து நிறைகுடம் குத்துவிளக்கு வைத்து அடுப்பில் நெருப்பு மூட்டி புதுப்பானை வைத்து பால் பொங்கும்போது புது அரிசியை வீட்டுத்தலைவர் பானையில் இட மகிழ்ச்சியுடன் பொங்கலிடுவார்கள்.

புதுப்பானைப் பொங்கலை மூன்று வாழை இலைகளில் படைத்து தேங்காய் உடைத்து பூஜைப் பொருட்கள்கொண்டு அனைவரும் பக்தியோடு சூரியனை வணங்குவார்கள். இறைவனுக்கு படைத்த பொங்கலை அனைவரும் சேர்ந்து உண்டு மகிழ்ந்து பொங்கல் தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

பொங்கல் தினத்திற்கு அடுத்தநாளை மாட்டுப் பொங்கல் தினமாக கொண்டாடும் வழக்கம் அவர்களிடம் உண்டு. உழவுக்கு உதவிய மாட்டுக்கு நன்றி செலுத்தும் முகமாக மாட்டுப் பொங்கல் கொண்டாடும் மரபு காணப்படுகிறது.



வீட்டு சாமியறையிலும் சமையலறையிலும் கட்டப்பட்ட 'புதிர்' நெல் அடுத்த வருடம் புதிர் எடுக்கும் வரை அப்படியே இருக்கும். பொதுவாக பொங்கல் தினம் முடிவடைந்த பின்னர் பொதுவான நாளில் 'அருவி வெட்டு' அல்லது நெல் அறுப்பு' இடம்பெறும். உணவு என்பது செல்வங்களுள் ஒன்றாக அவர்களால் கருதப்படுகிறது. எனவே இறைவன் இருக்கும் இடத்தில்தான் செல்வம் இருக்கவேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாகும். எனவேதான் சாமியறையில் தங்கள் உழைப்பின் மூலம் கிடைக்கின்ற செல்வங்கள் அனைத்தையும் சேர்த்துவைக் கிறார்கள்.

உழைப்பின் மூலம் கிடைக்கின்ற செல்வம் தை மாதத்தில் கிடைப்பது வழக்கம் என்ற காரணத் தால்தான் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பழமொழி தோற்றம் பெற்றிருக்கிறது எனலாம். தை மாதத்தில் செல்வம் அதிகமாக இருக்கும். இதன் காரணமாக திருமணங்கள் போன்ற நல்ல நிகழ்ச்சிகளை அதிகமாக தை மாதத்தில் தமிழர்கள் நடாத்துவார்கள். இந்தப் பழமொழியின் தாக்கம் யாழ்ப்பாணத்து மக்களிடையே இன்றும் உண்டு.

எது எவ்வாறு இருந்தாலும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலுக்கும் 'புதிர்' எடுப்பதற்கும் நெருங் கிய தொடர்பு உண்டு. இந்தத் தொடர்பை யாழ்ப் பாணத்து மக்கள் இன்றும் பேணிப்பாதுகாக்கி றார்கள். தொடரட்டும் மண்ணின் மரபு!

உமா பிரகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 7



## கண்டி புனித நகரம்

**அமைவிடம் : மத்திய மாகாணம்**

செங்கடகலபுர என்று பெயர் பெற்றிருந்த புனித பௌத்த தலம் சிங்கள அரசர்களின் கடைசி நகராகும். 1815 இல் இந்நகரரை பிரித்தானியர்கள் கைப்பற்றும் வரை 2500 வருடங்களுக்கு மேலாக இங்கு பௌத்த கலாசாரம் மேலோங்கி விளங்கியது. பிரசித்தி பெற்ற தலதா மாளிகை இங்கு உள்ளது. இது ஒரு பெயர் பெற்ற புனிதயாத்திரைத் தலமாக விளங்குகிறது.



## அனுராதபுர புனித நகரம்

**அமைவிடம் : வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம்**

இப்புனித நகரம் கி.பி 3ம் நூற்றாண்டில் சங்கமித்தை புனித அரசமரக் கிளையைக் கொண்டு வந்து நாட்டப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டது. இவர் பௌத்த பிக்குணிகள் அமைப்பை உருவாக்கியவர். அனுராதபுரம் சுமார் 1300 ஆண்டுகள் இலங்கையின் அரசியல் மற்றும் சமய நகரமாக எழுச்சி பெற்றிருந்தது. பின்னர் அங்கு ஏற்பட்ட படையெடுப்பைத் தொடர்ந்து இந்நகரம் கைவிடப்பட்டது. அடர்ந்த காட்டுக்குள் பல காலமாக மறைந்திருந்த இந்த நகரத்தின் அழகான இயற்கைக் காட்சிகளும் மாளிகைகளும் மடாலயங்களும் சரித்திரச் சின்னங்களும் இன்று மீண்டும் பார்க்கக் கூடியனவாக இருக்கின்றன.



## சிங்கராஜவனம்

**அமைவிடம் : சப்ரகமுவ மற்றும் தென் மாகாணம்**

இவ்வனம் இலங்கையின் தென் மேற்குப்பகுதியில் காணப்படுகிறது. நாட்டின் கடைசி உட்புகக் கூடியதாக அமைந்துள்ள பிரதான உஷ்ணவலய மழைக் காடாகும். இங்கு காணப்படும் மரங்களில் 60 வீதமானவை மிகவும் அரிதாகக் காணப்படும் இனங்களாகும். இக்காடுகளில் ஏராளமான பறவை இனங்கள் பாலூட்டும் மிருகங்கள் பூச்சிவகைகள் ஊர்வன ஆகியன உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதன செல்வங்கள்



## சிகிரியா புனித நகரம்

**அமைவிடம் : மத்திய மாகாணம்**
**மாத்தளை மாவட்டம்**

முதலாவது காசியப்ப மன்னன் காலத்தில் உருவாக்கப்பட்ட இந்நகரின் எச்சங்களை இன்றும் காணலாம். 370 மீற்றர் உயரமுள்ள கற்பாறை உச்சியிலும் மற்றும் செங்குத்தான பகுதிகளிலும் இதன் எச்சங்கள் உள்ளன. ஒரு சிங்கத்தின் வாயினூடாக உள்ளே செல்வதற்காக அமைக்கப்பட்ட படிகள் ஊடாக மேலே செல்லலாம்.



## குகைக்கோவில்

**அமைவிடம் : மத்திய மாகாணம்**
**மாத்தளை மாவட்டம்**

மாத்தளை மாவட்டத்தில் 22 நூற்றாண்டுகளாக புனித யாத்திரைத் தலமாக விளங்கும் புனித குகைக்கோவில் இதுவாகும். இக்கோவில் சிறப்பாகப் பேணப்பட்டு வருகிறது. இங்கு 157 புத்தர் சிலைகள் உள்ளன. அத்துடன் 2100 மீற்றர் தூரத்திற்கு புத்தருடைய பௌத்த ஓவியங்கள் காணப் படுகின்றன.



## பொலநறுவை

**அமைவிடம் : வட மத்திய மாகாணம்**
**பொலநறுவை மாவட்டம்**

இலங்கையின் முதலாவது தலைநகரமாக இருந்த அனுராதபுரம் 993 இல் அழிக்கப்பட்ட பின்னர் இலங்கையின் இரண்டாவது தலைநகரமாக பொலநறுவை விளங்கியது. சோழர்களால் மட்டுமன்றி 12ஆம் நூற்றாண்டில் 1ம் பராக்கிரமபாகுவால் உருவாக்கப்பட்ட ரம்மியமான நகரத்தின் எச்சங்கள் தற்போதும் காணப்படுகின்றன. இங்கு வியக்கத்தக்க கட்டடங்கள் மற்றும் சிற்பங்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.



## காலி நகரம்

**அமைவிடம் : தென் மாகாணம்**

இந்நகரம் 16ம் நூற்றாண்டி... போர்த்துக்கேயர்களால் உருவா... கப்பட்டது. 18ம் நூற்றாண்டி... பிரித்தானியர்களின் வருகைக்கு... முன்னர் அதன் அபிவிருத்தி உச்... கட்டமாக இருந்தது. தென் மற்று... தென்கிழக்கு ஆசியாவில் ஐரோ... பியர்களால் கட்டப்பட்ட கோ... டை அரண் நகரத்திற்கு இ... சிறந்த உதாரணமாகும். ஐரோப்பி... கட்டடக் கலையும் தெற்காசிய ம... புகளும் இதில் இணைந்து காண... படுகிறது.

தொகுப்பு: ஜெனிஷா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதம் உங்களுக்கு எப்படி?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மகரம் | - | சூரியன் | கர்க்கடகம் | - | செவ்வாய் |
| கும்பம் | - | வியாழன் | கன்னி | - | சனி |
| மீனம் | - | கேது | தனு | - | புதன்,இராகு,வெள்ளி |

தை மாதம் மிருகசீரிடம் நட்சத்திரம் மிதுன இராசியில் ஆரம்பமாகின்றது. தை மாத முடிவு ஆயிலியம் நட்சத்திரத்தில் நிறைவு பெறுகின்றது.

*01.01.2010 தொடக்கம் 31.01.2010 வரை*

- ஜோதிடமாமணி எஸ். தெய்வநாயகம்



**மேடம்**

இவர்களுக்கு வியாழன் 11 ஆம் இடத்திலும், சனி ஆறாம் வீட்டிலும், இராகு 9 ஆம் வீட்டிலும், கேது மூன்றாமிடத்திலும் தை மாதம் முடியும் வரை உள்ளதால் சகல துறைகளிலும் முன்னேற்றமும், உயர்ச்சியும் கிடைக்கும். எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். மேட இராசியினருக்கு மேன்மை தரும் மாதமாக தை மாதம் அமையும்.



**இடபம்**

இவர்களுக்கு தை மாதத்தில் வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் பலமிழந்துள்ளதால் சகல விடயங்களிலும் அவதானத்துடன் செயற்படுவது நல்லது. மனக் குறைகள் தென்படும். காரியங்களில் வீணான தடைகள் ஏற்படும். பணத் தட்டுப்பாடு நிலவும். இடப இராசியினரை இடர்படுத்தி நிவர்த்திக்கும் மாதமாக தைமாதம் அமையும்.



**மிதுனம்**

இவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் சிறப்புடையதாக உள்ளதால் எடுத்த கருமங்கள் வெற்றிகரமாக அமையப் பெற்று மனமகிழ்ச்சி தரும். புதிய முயற்சிகளில் நாட்டம் ஏற்படும். முதலீடுகளால் பலர் இலாபமடைவர். மிதுன இராசியினருக்கு தை மாதத்தில் மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறிட வாய்ப்புண்டாகும்.



**கடகம்**

இவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது என்பவை மத்திம பார்வையாக உள்ளதால் தை மாதம் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டிய மாதமாகும். பலவிதங்களிலும் பணச் செலவும், அலைச்சலும் ஏற்படுவதோடு எதையும் திட்டமிட்டுச் செய்ய முடியாத சூழ்நிலையும் உருவாகும். உறவினர்களை பகைத்துக் கொள்ள நேரிட்டு, கடக இராசியினருக்கு கலக்கத்தைக்



**சிங்கம்**

இவர்களுக்கு ஏழரைச் சனி கடைக்கூறு ஆரம்பமாகியுள்ளது. இருந்த போதிலும் வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் சிறப்பாக உள்ளதால் தங்கள் கருமங்களில் கெட்டித்தனமும், சுயநலமும் கொண்டவர்கள் சகல துறைகளிலும் வெற்றியடைவர். மனக் குறைகள் பல தீரும். சுய முயற்சிகளை ஆரம்பிக்கவும். பல நன்மைகளைத் தரக் கூடிய காலமாக தை மாதம் அமையும்.



**கன்னி**

இவர்களுக்கு தை மாதம் ஏழரைச் சனி நடுக் கூறும் ஜென்மச் சனி காலம் ஆகும். வியாழன் பார்வையும் பலமிழந்துள்ளதால் மிகவும் அவதானமாகவும் பொறுமையுடனும் நடந்து கொள்வது நல்லது. எதிர்பார்ப்புகள் யாவும் நீண்ட இழுபறியின் பின்பு நிறைவேறும். கன்னி இராசியினருக்கு சிறிய கண்டங்களை தை மாதம் கொடுக்கும்.



**துலாம்**

இவர்களுக்கு ஏழரைச் சனி முதற்கூறு ஆரம்பமாகியுள்ளது. வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் நன்றாக உள்ளதால் நன்மைக்குரியதாகவே அமையும். முயற்சிகளில் வெற்றியும், பண வரவும் உண்டாகும். எந்தக் கருமத்தையும் திட்டமிட்டு செய்தால் துலா இராசியினர் துயருறாத வகையில் தை மாதம் அமைந்திடும்.



**விருச்சிகம்**

இவர்களுக்கு வியாழன் சிறிது பங்கமாக இருந்தாலும் சனி, இராகு, கேது பார்வைகள் சிறப்பாக உள்ளதால் பல விடயங்களில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாள் கருமங்கள் நிறைவேறும். புதிய முயற்சிகளை அவதானத்துடன் செய்வது நன்மை தரும். முதலீட்டாளர்கள் இலாபமடைவர். தை மாதம் விருச்சிக இராசியினருக்கு வியப்பைத் தரும் .



**மகரம்**

இவர்களுக்கு அட்டமச் சனி முடிவுற்றுள்ளது. வியாழன் இரண்டிலும் இராகு, கேது பார்வைகள் சிறப்பாக உள்ளதாலும் சகல விடயங்களில் வெற்றி தரும் மாதமாக தை மாதம் அமைந்திடும். பொருளாதார சிறப்பும், காரியங்களில் வெற்றியும் ஏற்படும். திட்டமிட்ட முதலீடுகளால் சிலர் நல்ல பலனடைவர். மகர இராசியினருக்கு மனக் கலக்கம் தராத மாதமாக தை மாதம்



**தனு**

இவர்களுக்கு வியாழன் மத்திம பார்வையாகவும், இராகு, கேது, சனி என்பவை ஓரளவு சாதகமான நிலையிலும் உள்ளதால் தை மாதத்தில் இடையிடை சிறிது பிரச்சினைகளைக் கொடுத்து இறுதியில் நன்மை தரும் மாதமாக அமைந்திடும். கடன் தொல்லைகளால் சிலர் கவலையடைவர். திட்டமிட்ட புதிய முயற்சிகள் இடைநடுவில் தடையாகும்.



**கும்பம்**


இவர்களுக்கு அட்டமத்து சனி, ஜென்மத்து வியாழன் என்று கலக்கமடையத் தேவையில்லை. இவைகளால் சிறிது கஷ்ட நிலை மாதிரித் தோன்றினாலும் நன்மையாகவே காரியங்கள் நடந்தேறிடும். காரியங்களில் சிறிது தடைகளும், பண வரவு கஷ்டமும் தோன்றினாலும் மாத இறுதியில் இவைகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்படும். கடவுள் நம்பிக்கையுடன் காரியங்களில் இறங்



**மீனம்**

இவர்களுக்கு மிகையாக கொடுக்கா விட்டாலும் சுமாரான பலன்களை தை மாதம் கொடுத்திடும். எதிர் பார்த்த கருமங்களில் இழுபறிகள் ஏற்படும் விதத்தில் வியாழன், சனி, இராகு, கேது அமைந்திருந்தாலும் நன்மையான காரியத்தின் பொருட்டு செலவுகளும், சுபகரும நன்மைகளும் ஏற்பட வாய்ப்புண்டாகும். பண வரவு கஷ்டத்தினால் சிலர் கடன்பட நேரிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Let the swirling surf, the open spaces and a myriad colours greet you. Let lavish comforts, divine fare and sheer bliss indulge you. Take in the Galle Literary Festival from the unique creation we call Jetwing Lighthouse - and let its unforgettable wonder truly inspire you. Call Dilip on 0773 290482 or visit www.jetwinghotels.com

Jetwing Lighthouse


Galle Literary Festival 2010 Sri Lanka

Platinum Sponsor

slh.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் தரும் நல்லூர் கந்தசுவாமி ஆலயம்



தலைநகர் கொழும்பில் இருந்து ஆகாய மற்றும் தரை மார்க்கங்களூடாக யாழ் நகரை சென்றடைய முடியும்.

யாழ் நகரில் இருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் நல்லூர் அமைந்துள்ளது.

ஆடி ஆமாவாசையிலிருந்து 6ம் நாள் கொடியேறி 25 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் 24ம் நாள் தேர்த் திருவிழாவும் 25ம் நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

இலங்கையின் வடபகுதியில் உள்ள தமிழர்களின் இராசதானியாகவும் யாழ்ப்பாண இராச் சியத்தின் தலைநகரமாகவும் விளங்கிய இடம் நல்லூர் ஆகும். நல்லூர் என்று நினைக்கும்போது முருகப் பெருமானின் தோற்றம் உடனே மனதில் தோன்றும்.

முருகனை அதிகம் வழிபடுபவர்கள் தமிழர்களே. இதன் காரணமாக இவர் தமிழ்க் கடவுள் என்று சிறப்பாக அழைக்கப்படுவதோடு சரவணன், கார்த்திகேயன், குமரன், கந்தன், வடிவேலன், சுப்ரமணியன், சுவாமி நாதன்,செந்தில்நாதன், ஆறுமுகன், சண்முகநாதன் என பல பெயர்களால் வழங்கப்படுகிறார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தொன்மையை யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை, மற்றும் ஈழத்தோடு தொடர்புடைய இலக்கிய நூல்கள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகளில் இருந்து தெரிந்து கொள் ளலாம். அதுமட்டுமல்லாமல் பிற நாட்டு அறிஞர்களும் நல்லைக் கந்தனைப்பற்றி ஆராய்ந்து எழுதியுள்ளார்கள். Conquest of Ceylon என்ற நூலின் ஆசிரியரான queroz தமது நூலில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் யாழ்ப் பாணத்திலேயே பெரிய கோவில் என்று கூறியுள்ளார்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றாண்டு முற்பகுதிவரை யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லூர் விளங்கியதுடன் யாழ்ப்பாண அரசிற்கு இக்கோவில் சிறப்புச் சேர்த்துள்ளது.இக் கோவிலின் தோற்றம் பற்றிய மிகச் சரியான, தெளிவான தகவல்கள் இல்லை. ஆனாலும் யாழ்ப்பாண அரசு காலத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் மிக முக்கியமான கோவிலாக இருந்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் நல்லூரில் இருந்த மிகப்பெரிய கோவில் இதுவென்பது போர்த்துக் கேயர்களுடைய குறிப்புக்களில் இருந்து அறியமுடிகிறது.

யாழ்ப்பாண மன்னனான ஆரியச்சக்கரவர்த்திகளின் அரண்மனையை அண்டி பழைய கோவில் அமைந்தி ருந்ததாக கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் நல்லூரை மையமாக வைத்து கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோவில், தெற்கில் கைலா சநாதர் கோவில், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோவில், வடக்கில் சட்டநாதர் கோவில் என நாற்திசையும் கோவில் அரண்களை அமைத்திருந்தார்கள்.

இக்கோவில்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சிசெய்த ஆரிய சக்கரவர்த் திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கலிங்கமாகன் அல்லது கூழங்கை சக்கரவர்த்தியால் கட்டுவிக்கப் பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி பதினேழு ஆண்டுகள் ஆட்சி செய்த சிங்கள அரசின் பிரதிநிதியான பிற்காலத்தில் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்ட கோட்டை அரசனான ஸ்ரீ சண்முகப்பெருமாள் என்பவனால் இக்கோவில் கட்டப்பட்டதாக வேறு ஒரு கருத்தும் உண்டு.

முன்னர் சிறிய கோவிலாக இருந்த இந்தக்கோவிலை தனது ஆட்சிக் காலத்தில் புவனேகபாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக்கூடும் என்பது வேறு ஒரு கருத்தாகும்.

யாழ்ப்பாணக் கச்சேரியில் 1882ம் ஆண்டு உருவாக்கபட்ட சைவசமயக் கோவில்கள் தொடர்பான பதிவேட்டில் கந்தசுவாமி கோவில் 'குருக்கள் வளவு' என்ற காணியில் கட்டப்பட்டுள்ளதெனகூறப்பட்டுள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை இரகுநாத மாப்பாண முதலியார் வம்சத்தினரே பரம்பரையாக நிர்வகித்து வருகின்றனர். கந்தையா மாப்பாண முதலியார் காலத்தில் கோவில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மற்றும் அவரது மருமகனான வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை ஆகியோரால் கந்தபுராண படனம் சிறப்பாக நடைபெற்றது.

கி.பி 1899 இல் ஆறுமுக மாப்பாண முதலியாரின் பரிபாலனத்தில் மணிக்கூட்டுக்கோபுரமொன்று கட்டப்பட்டது. 1902 இல் மூலஸ்தானம் கருங்கற் திருப்பணியாக நிறைவேறி கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அவர் காலத்திலேயே 1909


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி வள்ளி தெய்வானை சமேதரராய்
கைபிலாய வாகனத்தில் வீதி வலம் வரும் காட்சி.

இல் சுற்றுப்பிரகார மண்டபங்களும் கட்டப்பட்டன. மாப் பாண முதலியார் பரம்பரையினால் இக்கோவிலில் நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடத்தப்படுகின்றன. ஈழத்திலுள்ள கோவில்களுள் நேரம் தவறாத நித்திய நைமித்திய பூஜைகள் மூலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றைய கோவில்களுக்கு முன்னோடியாக விளங்குகின்றது.

கோவிலின் அழகிய முகப்புத் தோற்றம்



நல்லூர் கந்தசுவாமி கோவிலின் அமைப்பு மிகவும் அழகானதுடன் பிரதான கோவில் கிழக்கு வாசலைக் கொண்டுள்ளது. தேரோடும் அழகிய வீதி நாற்புறமும் சூழ கோவிலின் வடக்குப் பகுதியில் கோவிலுக்குரிய நந்தவனம் காணப்படுகிறது.

இக்கோவிலின் உற்சவங்கள் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் மாதப் பிறப்பன்று தீர்த்த அபிஷேகமும் மற்றும் கார்த்திகை உற்சவம், சஷ்டி அபிஷேகம் ஆகியனவும் இடம்பெறும். ஆடி அமாவாசையிலிருந்து 6ம் நாள் கொடியேறி 25 நாட்கள் நடைபெறும் திருவிழா இந்துக்களுக்கு முக்கியமான திருவிழாவாக கொள்ளப்படுகிறது.

தமிழர் வாழ்வோடும் வரலாற்றோடும் இறுகப் பின்னிப்பிணைந்த கோவிலாக மாத்திரமல்லாமல் மக்களின் மனங்களோடும் இணைந்த கோவிலாக நல்லூர் கந்தசுவாமி கோவில் விளங்குகிறது.



அலங்காரக் கந்தன்

- உமா பிரகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்கள் பேசும் பரத நாட்டியக் கலை



**காலத்துக்குக் காலம் தன்னுள் மாற்றத்தை கொண்டு இன்னும் புதிதாக மாறிக்கொண்டு இருக்கிறது.**

ஒவ்வோர் இனத்தினதும் பெருமைகளைப் பறை சாற்றுவது அவ்வினத்தினால் பேணி வளர்க்கப்பட்டு வரும் கலை கலாசாரம், பண்பாடு ஆகியனவாகும். தமிழினத்தின் கலைகளில் மிக முக்கியமானதோர் இடத்தைப் பரத நாட்டியக் கலை பெற்றிருக்கிறது. அதற்கு ஒரு காரணமாக அமைவது அதன் தொன்மையாகும். இந்நடனக் கலையின் பெருமைகள் பற்றியும் நுட்பங்களைப் பற்றியும் பரத நாட்டிய விற்பன்னர்கள் சிலர் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியும் அதன் வளர்ச்சி மற்றும் அதன் மாற்றங்கள் குறித்து தமது அனுபவபூர்வமான கருத்துகளை தெரிவித்தும் வந்திருக்கிறார்கள். பரதக் கலையின் வளர்ச்சி குறித்து சென்னை பரதாஞ்சலி பரத நாட்டிய விற்பன்னர்களான வி.பி. தனஞ்செயன், சாந்தா தனஞ்செயன் ஆகியோர் இணைந்து ''சிவயோகம்'' (லண்டன்) சிறப்பு மலரில் எழுதிய கட்டுரை ஒன்றின் சில அம்சங்களை ஈண்டுக் குறிப்பிடுதல் தகும்.

''நடனக் கலைஞர்களைப் பற்றி சங்க இலக்கியங்களான தொல்காப்பியம்,பத்துப் பாட்டு, எட்டுத் தொகை போன்ற நூல்கள் மிக அதிக அளவில் கூத்து என்றும் கூத்தினை நிகழ்த்துபவர்கள் கூத்தர் என்றும் விரலியர் என்றும் எடுத்துக் கூறிப் பலவாறாகப் போற்றுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையும் ஆய்ச்சியர் குரவையும் பண்டைய நடனக் கலையின் நுட்பங்களையும் பாடு பொருள்களையும் விரிவாக எடுத்து இயம்புகின்றன. சிலம்பினுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் தம் உரையில் கூத்து நூல், பரத சேனாதிபதியம் இந்திர காளியம் எனும் நடன நூல்களைப்பற்றி விபரித்துள்ளார். இத்தகு காலத் தொன்மையுள்ள பரதம் காலப் போக்கில் தனது புற வடிவையும் அக வடிவான பாடு பொருளையும் மாற்றிக் கொண்டே வந்திருக்கிறது.

எந்த ஒரு கலையும் அது தோன்றிய காலத்தில் இருந்தது போலவே இன்றும் இருந்தால் அக்கலை தேக்க நிலையை அடைந்து விட்டது என்று பொருள். ஆனால் பரதக் கலை, காலத்திற்கு ஏற்ப தன்னுள் மாற்றத்தைக் கொண்டு இன்னும்புதிது புதிதாக தனது நோக்கிலும் பாடு பொருள்களிலும் மாறிக் கொண்டே இருக்கிறது.

பண்டைய மூவேந்தர் காலத்தில் இக்கலை கோயில்களில் பணியாற்றிய ருத்ர கணிகை தேவர் அடியார் ஸ்ரீ மாணிக்கம் என்பவர்களால் பேணி வளர்க்கப்பட்டது. காலப் போக்கில் கோயில்களில் வருவாய் குறையவே கோயில்களில் பணியாற்றிய தேவர் அடியார்கள், இக்கலையைத் தங்கள் இல்லத்தில் கற்பிக்கத் துவங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ பாவம், ராகம், தாளம் ஆகியவற்றின் சங்கமமாக விளங்குவது பரத நாட்டியம். ”

தஞ்சைநால்வரின் பங்களிப்பில் பரதம் முறைப்படுத்தப்பட்டபோது இந் நடனத்தில் புஷ்பாஞ்சலி, பதம், வர்ணம், ஜாவளி, தில்லானா போன்றன சேர்க்கப்பட்டன. இத்தகு மாற்றங்களைக் கொண்டிருந்தாலும் நால்வரின் படைப்புகளில் சிருங்கார ரஸமே பிரதான ரஸமாகக் கொள்ளப்பட்டது. சிருங்கார ரஸத்திலும் நாயக நாயகி பாவத்தில் இறைவனுக்குப் பதிலாக அன்றிலிருந்த மன்னர் களைப் பாட்டுடைத் தலைவனாகவும் பாடல்கள் புனையப் பெற்றன. நடனங்கள் நிகழ்த்தப் பெற்றன.

## அட்டைப்படம்: பரத ரத்னா ரமா வைத்தியநாதன்

**தமிழ்நாட்டில் பிறந்து டெல்லியில் வளர்ந்த ரமா வைத்தியநாதன் உலகப்புகழ் நர்த்தகி யாமினி கிருஷ்ணமூர்த்தியின் மாணவி. பரத நாட்டியத்தில் உயர் பட்டமும் பி.கொம் பட்டமும் பெற்ற இவர் உலகின் பல பாகங்களுக்கும் சென்று பரதநாட்டிய நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ் பெற்றவர். நடன நாட்டிய பைரவி, நாட்டிய இளவரசி, பரதரத்ன, உட்பட பல பட்டங்களைப் பெற்றவர். பரதநாட்டியத்தின் சில முத்திரைகளையும் பாவங்களையும் இங்கு பிரதிபலிக்கிறார்.**



ஆங்கிலேயர் வருகை பின்னர் சுதந்திரம் என்னும் சமூக மாற்றம் மற்றும் அரசியல் மாற்றங்களினால் அனைத்துச் செயற்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அத்தகு மாற்றம் நடனத்திலும் ஏற்பட்டது. நடனம் கோயிலில் இருந்து கணிகையர் இடம்சென்று பின்னர் நடனப்பள்ளிகளை வந்தடைந்தது.



நடனப் பள்ளிகளை வந்தடைவதற்கு முன் பரதம் சில ஊடகங்களைச் சார்ந்த கலைஞர்களின் தனித்துவத்தால் பந்தணை நல்லூர், மெலாட்டூர், வழுவூர், காஞ்சிபுரம் எனும் பாணிகளைக் கொண்டு அப் பாணிகளின் விதி முறைகள் இன்றுவரை பின்பற்றப்படுகின்றன'' என்றவாறு அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

''பாவமானது ஆண் பெண் இருபாலாருடைய மனத்திலுண்டாகும் உணர்ச்சிகளை ஜாடைகளால் எடுத்துக் காண்பிப்பது ஆகும். பாவமானது அவரவர்களின் பால், வயது மற்றும் சூழ்நிலைக்கேற்ற வண்ணம் வேறுபடக் கூடியது. இது கருத்துக்களைப் புலப்படுத்துவதோடு. உணர்ச்சிகளை நவரஸங்கள் மூலம் அதாவது பாவத்தின் மூலம் வெளிப்படுத்திக் காட்டுவதேயாகும்.

இவ்விதமாக தமது'' நிருத்தியம்'' என்ற நூலில் குறிப்பிட்ட பரதகலா வித்தகர்மீரா மங்களேஸ்வரன் அவர்கள் ராகம், தாளம் ஆகியவற்றையும் விளக்கி இருக்கிறார். நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் நடனத்தின் முப்பெரும் பிரிவுகள் என்பதைக் குறிப்பிட்டு விளக்கும்போது நிருத்தியம் என்பதற்கு தரும் விளக்கம் பின் கண்டவாறு அமைகின்றது.

''கீதம், அபிநயம், பாவம் இவைகளைக் கொண்டு தாளக் கட்டு விடாமல் ஆட வேண்டியவை நிருத்தமாகும். நடனமாகிய நிருத்தம் அபிநயக் கலையால் கதையை (கருத்துக்களை) வெளிப்படுத்தும் நாட்டியம் கலந்து திகழும் கலை நிருத்தியம் எனப்படும். பாடலின் பொருளைக் கை முத்திரைகளினாலும் தாளத்தினைப் பாதங்களைத் தட்டி ஆடுவதாலும் பாவத்தினை முகத்தினாலும் கண்களினாலும்வெளிக் கொண்டு வரல் நிருத்தியமாகும். ராவ பாவங்களைக் கூட்டி தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி, கருத்தைப் புலப்படுத்தலே நிருத்தியமாகும். இதற்கு நிறையப் பயிற்சிகள் செய்ய வேண்டும். நன்றாகப் பயிற்சிகள் செய்யப்பட்டு ஆடப்படும் நிருத்தியம், மன நிறைவை அளிக்க வல்ல நுண்கலையாகும்'' எனக் குறிப்பிடுமவர், பாவங்களையும் ராகங்களையும் பொருட்கள் மற்றும் செயற்பாடுகளையும் விளக்கும் அஸம்யுத ஹஸ்த்தம் (ஒற்றைக்கை முத்திரைகள்) மற்றும் ஸம்யுத ஹஸ்த்தம் (இரட்டைக் கை முத்திரைகள்) ஆகியவற்றையும் விபரிக்கின்றார்.

- கங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் நாட்டுக் கூத்துக்கலை

- கலைமாமணி பொன். தெய்வேந்திரன்

" கூத்தாட்டவைக் குழாத் தற்றே பெருஞ் செல்வம் போக்கும் அது விளிந்தற்று" என்று வள்ளுவரும் குறளில் காட்டியிருப்பதால் கூத்தின் பழமை புலப்படுகின்றது. "

## தோற்றம்

ஆதி வாழ் தமிழனின் சிந்தனைகளும் வந்தனைகளும் என்றும் தமிழினத்தை வியக்க வைக்கின்றன. தொல்காப்பியர், அகத்தியர் காலத்துக்குன்பே இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் மிக உன்னத நிலையில் இருந்து வந்ததைத் தங்கத் தொனி போன்ற சங்கத் தமிழ் பேசுகின்றது.

இசை, இயலுக்கும் நாடகத்திற்கும் இடையில் அமர்ந்து இரண்டையும் ஒளிபெறச் செய்து வருகின்றது. இசையில் இயலும் நாடகம் ஒன்றிணைந்த தன்மையே, எமது பண்பாடும் நாகரிகம் வளரவும் மிகவும் உதவியாயிற்று. இதுவே பண்டைய தமிழன் ஆழ்மனதின் உந்துதலால் பல்தொழில் வித்தகனாகவும் பல்கலை விற்பன்னனாகவும் வாழ வழிசமைத்தது எனலாம்.

அகத்தியர் முத்தமிழுக்கும் இலக்கணம் வகுத்தார் என்பர். தொல்காப்பியம் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலநெறி வழக்கம்" என்று பொருளதிகாரத்தில் நன்கு குறிப்பிடுகின்றார். இங்கே 'நாடகம்' எனும் சொல் கையாளப்பட்டிருப்பினும் 'கூத்து' என்ற பதமே பண்டை நூல்களில் காணப்படுகின்றது. தில்லைக் கூத்தன் என்பதும் இறைவன் ஆடும் கூத்தைக் குறிப்பதே. சங்கம் மருவி வந்த காலங்களில் முத்தமிழின் மேன்மையையும் நன்மையையும் புலவர்கள் தெளிந்த பிரயோகங்கள் பல உள.

எனக்கு "சங்கத் தமிழ் மூன்றுந் தா" என்று வேண்டுகிறார் ஔவையார். மேலும் "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" என்று பரிபாடலும், "முத்தமிழும் நான் மறையும் ஆனான் கண்டாய்" என்று அப்பரடிகள், இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என வகைபடச் சாற்றினார் மதியுணர்ந்தோரே" பிங்கல நிகண்டு, "முத்தும் முத்தமிழும் தந்து முந்துமோ" (கம்பர்) என்ற அடிகள் தமிழின் சிறப்பை பறை சாற்றுகின்றன.

எனவே நாடகம் என்னும் பதம் நடனத்தையே அன்று குறித்தது எனத்தெரிகின்றது. கூத்து என்பது தமிழ்ப் பண்டைய தமிழன் வாழ்வில் கூத்துமிகத் தொன்மையானதே. பண்டைய மக்கள் வேட்டையாடிய வெற்றிக் களிப்பில் 'ஆ', 'ஊ' எனச் சப்தமிட்டு ஆடிய காலத்தில் இருந்தே கூத்து ஆரம்பித்தது எனலாம். விலங்கு பிடிக்க விலங்கு மாதிரி ஒப்பனை செய்தும் இலைச்சாற்றால் நிறங்கள் பூசவும் கற்றுத் தேர்ந்து காலப்போக்கில் காரணங்களுடன் பொழுது போக்கி மகிழப் பலவித கூத்துக்களை ஆடினர் என்று வரலாறு காட்டுகின்றது. பின்னர் அரங்கம், தெரு, வீதி, திண்ணை போன்ற இடங்களில் மக்களால் மகிழ்விக்க ஆடப்பட்டது.



அரசசபையில் ஆடும் கூத்து பொது மக்களுக்காக ஆடும் கூத்து. இன்னுமொன்றாக இரு வகையாக அன்று ஆடினர். காலப்போக்கில் பழந்தமிழர் வாழ்வில் கூத்து முக்கிய நிகழ்வாகியது.

கூத்துப் பார்க்க வருவோர் கூத்து முடிந்ததும் அரங்கை விட்டு வெளியே செல்வது போல ஒருவனிடத்து செல்வம் வருவதும் போதலும் நிகழுமாம் எனும் கருத்தமைய "கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம் போக்கும் அது விளிந்தற்று" என்று வள்ளுவரும் குறளில் காட்டியிருப்பதால் கூத்தின் பழமை புலப்படுகின்றது. சங்க காலத்துக் கூத்து சமயச் சடங்குகள், போர்க்களம், வெற்றிக் களிப்பு சார்ந்ததாக அமைந்து இருந்ததைக் காணக்கூடிய தாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைமாமணி பொன். தெய்வேந்திரன் அவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர். எழுத்தாளரும், சில நூல்களின் ஆசிரியருமான இவர், சிறந்த கூத்துக் கலைஞராகவும் விளங்கியவர்**



அகத்திணைப் பாடல்களில் தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி நற்றாய் செவிலித் தாய் போன்றவர்களின் கூற்றாகவே அமைந்துள்ளது.

போருடன் தொடர்புள்ள கள வேள்வியும் பேய் மகளிரின் துணங்கைக் கூத்தும் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது. நாடகம், கூத்து என்றும் நடம், நட்டம், நடனம், நடிப்பு, ஆடல், பாடல், ஆட்டம், ஆட்டு, கூத்து, தாண்டவம், சொக்கம், கரணம், குறிப்பு, விறல், அவிநயம் ஆகிய சொற்களையும் பாவித்துள்ளதையும் அறிய முடிகின்றது. ''பாடலோர்த்தும் நாடக நயந்தும்'' என வரும் பட்டினப்பாலைத் தொடர் இதை விளக்கும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் பல்வகைக் கூத்து பற்றியும் ஆடல் பாடல் பற்றியும் வெற்றிக் களிப்பில் இருந்த சேரன் சபையில் தில்லைக் கூத்தனின் ஒப்பனையுடன் சாக்கையன் ஆடிய கூத்துப் பற்றியும் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

கலைகள் யாவும் தாயிடம் இருந்து சேய் பெற்ற வரலாறே. பண்டைய கிரேக்க, சீன, ஜப்பான், வட இந்தியா போன்ற இடங்களில் பலவிதமான கூத்து வகைகள் இருந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டுப் பாரம்பரியமே கூத்தில் இங்கு தழுவப்பட்டு நாடகம் வரை மிளிர்ந்தது என்பது மறக்க முடியாத உண்மை. மூவேந்தர் படையெடுப்புகளின் பின், சேர நாட்டு மக்களும் மற்ற மக்களும் வடகிழக்கு மாகாணங்களில் தம் உறைவிடத்தை நிறைவு செய்த காரணமும் கூத்து வளர உதவியது.

வடகிழக்கு மாத்திரமின்றி மன்னார், புத்தளம், சிலாபம் வரை கரையோரப் பகுதிகளிலும்கூத்துக் கலை நல்ல வளர்ச்சி கண்டிருந்தது. பழந்தமிழர் பண்பாட்டுக் கோலங்களை வெளிக்காட்டிய களவேள்வி, வெறியாட்ட, சமயச் சடங்குகள், விவசாயச் சடங்குகள், விசேட விழாக்கள், பருவ கால விழாக்கள், தை நீராடல், சிலம்பு காட்டும் இந்திர விழா, காவிரியாடல், காம தகனம், ஆச்சியர் குரவை, குன்றக் குரவை, பள்ளுப் பாடல், குறவஞ்சிக் கூத்து, நாடகம், நடனம் போன்ற இன்னோரன்ன வகைகளில் அநேகமான வை ஆட்ட வடிவிலும் நடன வடிவிலும் நாடக வடிவிலும் இலங்கையிலும் கைக்கொள்ளப்பட்டு வளர்ச்சி கண்ட வரலாறு உண்டு.

### இலங்கையில் நாட்டுக் கூத்துக் கலையின் தோற்றம்

அன்றைய நாட்களில் இலங்கையில் வடபகுதி, கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதிக்கும் தென் இந்திய பகுதிக்கும் நெருங்கிய படகுச் சேவையும் வணிக போக்குவரத்துச் சேவையும் இருந்ததாக அறியக் கிடக்கின்றது. அறிஞர் பரிமாற்றம், கலைஞர் பரிமாற்றம் மிக இலகுவானதாகவும் நடைபெற்றது. சிலப்பதிகாரத்தின்படி தமிழகத்தின் மேற்குக் கரையில் நீண்ட மலைத் தொகுதி 'குமரி மலை' எனும் பெயர் கொண்டு இருந்ததென்றும் வடக்கிலும் தெற்கிலும் குமரியாறு, பஃறுளி ஆறு என்று இரண்டு ஆறுகள் ஓடிச் செழுமை சேர்த்தது என்ற தகவல் கிடைக்கின்றது.

தெற்கே குமரினை வரை தமிழராட்சி நிலை பெற்றிருந்தது என்பது இதனால் உணரப்படுகின்றது. அவ்வப்போது அங்கிருந்து இங்கு வரும் தென் மாநிலக் கலைஞர்களால் கலைப் பாரம்பரியம் உருவாகவும் எமது நிலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றபடி சில மாற்றங்கள் செய்து வசதி கருதி வளர்க்க முடிந்தது.

கிராமங்களில் இது வலுவூன்றிப் பரவ வழி ஏற்பட்டதால் கிராமியக் கலை, நாட்டுக் கூத்து, நாட்டார் கலை என்று அழைக்கப்பட்டு அதனுடன் இணையும் பாடல், ஆடல் வகைகளும் கிராமியப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், நாட்டார் கூத்து, நாட்டார் அரங்கு எனும் சொற்றொடர்களையும் தோற்றுவித்தது.

கேரள மாநிலம், தமிழ் மாநிலத் தொடர்புகள் மிக நெருக்கமாக வந்திருந்த காலத்தில் மேற்கூறிய இடங்களில் பல்வகை விழாக்கள், சமய நிகழ்வுகள் சார்ந்த கிராமிய நிகழ்வுகள் மிக உன்னத நிலையில் வளர்ந்த காரணத்தால் மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் காலத்திற்கு முன்பும் பின்னும் இங்கிருந்து மார்கழி, திருவாதிரை உற்சவத்திற்கு சிதம்பர தரிசனம் செய்யச் செல்லும் பக்தர்களின் கூட்டமோ எண்ணிலடங்காதவை. அங்கு செல்லும் அடியவர் மீள வரும்போது எண்ணற்ற கலை, சமயப் பாரம்பரியங்களை இங்கு கொண்டு வந்து சேர்த்ததன் காரணமாக நாட்டுக் கூத்துக் கலை வளர வழிவகுத்தது. இருப்பினும் தனித்துவமாக இங்கும் சுயசிந்தனையில் கிராம மட்டத்தில் இருந்து வளர்க்கப்பட்ட வரலாறும் சில வகைகளுக்கு இருக்கத்தான் செய்கின்றன.




கிறிஸ்தவ மக்கள் கூடி வாழ்ந்த பகுதிகளிலும் கூத்து நன்கு வளர்ச்சி கண்டது. நாட்டுக்கூத்து சமுதாய ஒற்றுமை, சமயப் பண்பாடு, உடல் உள வளர்ச்சிக்கு ஏற்ற கலையாக மிளிர்ந்தது. கூத்து நடைபெறும் கிராம அரங்கிற்கு அயற் கிராம மக்களும் புதுவருடக் கொண்டாட்டத்திற்கு உறவினர், நண்பர் இல்லங்களுக்கு வருவது போன்று வருகை தந்து விருந்தோம்பலிலும் கலந்து மகிழ்ந்து தங்கிச் செல்வதும் ஒரு வழக்கத்தில் வந்தது என்பதை வாய்மொழி மூலம் அறிய முடிகின்றது.

வட மாநில பாரம்பரியக் கூத்து பற்றி பின்னர் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசித்தி பெற்ற களனி ஆலயம்



கி.மு. 3ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆண்ட தேவநம்பிய தீசன் என்னும் மன்னனின் வழிவந்த களனிதிஸ்ஸ மன்னனின் தலைநகராக களனி நகரம் விளங்கியது. களனி திஸ்ஸவின் மகள் விகாரமாதேவியாகும். தென்பகுதி மகாம என்னும் அரச பரம்பரை உள்ள கவின்திஸ்ஸ அரசன், விகாரமாதேவியை மணம் புரிந்ததினால், களனிதிஸ்ஸ அரசபரம்பரையுடன் தொடர்பைக் கொண்டது.

இவர்களுக்குப் பிறந்த பிள்ளையே, நாட்டின் வீரனாகப் போற்றப்பட்ட துட்டகமனுவாகும். இவ்வரசனது காலத்தில் இலங்கை அரசியல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் புகழ் பெற்று விளங்கியது. கண்டி எசல பெரஹரவுக்கு அடுத்தபடியாக மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது ஜனவரியில் இடம்பெறும் நவம் பெரஹரவாகும்.

கொழும்பு நகருக்கு கிழக்காக 10 கி. மீற்றர் தூரத்தில், கொழும்பு - கண்டி வீதியில் அமைந்திருப்பது இலங்கையின் மிகவும் புனிதமானதும், மிகவும் அழகானதும், மிகப் பெரியதுமான களனி ஆலயமாகும். களனி ஆற்றுக்கு எதிர்புறமாக மேற்குக் கரையில், மேட்டுப்பூமியில் கம்பீரமாக களனி ஆலயம் காட்சியளிக்கிறது.

மிக்க அழகியதான இவ்வாலயம் மிக நீண்ட வரலாறைக் கொண்டது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலச் சரித்திரத்தை இவ்வாலயம் கொண்டிருக்கிறது. இராமாயண காப்பியத்துடன் இந்நகரம் தொடர்பு கொண்டது. களனி இளவரசன் விபீஷணன், இலங்கை மன்னன் இராணவனுடன் நட்புக் கொண்டவனாக இருந்தான். இராவணனின் இளைய சகோதரனான விபீஷணன் தனது தமையன் போலவே பிரம்மனை நோக்கிக் தவம் செய்து வரம் ஒன்றைப் பெற்றிருந்தான். எந்தவொரு மிகப்பெரிய இக்கட்டான சூழ்நிலையிலும், அதர்மமான நடவடிக்கையில் ஈடுபடமாட்டேன் என சபதம் செய்திருந்தான். இதனால், அவன் ஒரு மிகப்பெரிய இடரான நேரத்தில், தனது நாட்டுக்கும், தனது சகோதரனுக்கும் எதிராக செயற்பட்டான்.

புத்தபெருமான் ஞானம் பெற்ற எட்டாவது வருடம், நாகா அரசனான மனியக்கிகாவின் அழைப்பில் களனி ஆலயத்துக்கு விஜயம் செய்தமை குறித்து தீபவம்சத்திலும், மகாவம்சத்திலும் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தரால் பௌத்த தர்மம் பரப்பப்பட்டதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, களனி ஆலயம், அரசனால் கட்டப்பட்டது. புத்தர் உட்கார்ந்திருந்து போதனை செய்த வைரம்பதித்த சிம்மாசனம், புத்தரின் கேசம், உபயோகித்த பாத்திரங்கள் யாவும், ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தூபியில் பதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

எனினும், களனி ஆலயம், மகிந்தர், இந்நாட்டில் பௌத்தத்தை போதிக்க வந்த பின்னரே பிரசித்தம் அடையத் தொடங்கியது. எல்லா சரித்திர காலத்திலும் களனி ஆலயம் பிரசித்திபெற்றே விளங்கிவந்துள்ளது. பராக்கிரமபாகு (கி.பி. 1351) மற்றம் அவருக்குப் பின்வந்தோர் காலத்தில் மிகவும் பெயர்பெற்று விளங்கியது. கம்போடியா, தாய்லாந்து, பர்மா பிக்குகளும் இங்கு விஜயம் செய்திருக்கிறார்கள்.

பின்னர் பல நூற்றாண்டுகளாக, பல்வேறு முன்னேற்றகரமான மாற்றங்களையும் இவ்வாலயம் கண்டுள்ளது. தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்த திராவிட அரசர்களினால் இவ்வாலயம் அழிவுக்கு உட்பட்டாலும், பின்னர் சிங்கள அரசர்களால் திருத்தப்பட்டது.

களனி ஆலயம் பௌத்த கட்டிடக் கலைக்கும் அதன் கலைத்துவத்துக்கும் இலங்கையில் மிகச் சிறந்த ஆலயமாகக் கருதப்படுகின்றது. ஆலயத்தின் வாசலில் 'மகர தோரண' (வில் போல் வளைந்த பகுதி) காணப்படுகிறது. இது கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில் கட்டப்பட்டது.

உள்ளூர் புராணக் கதைகளின்படி, மகர என்பது பாதுகாப்பின் சின்னமாகும். அத்துடன் மிருகங்களின் உருவங்களும் கவரும் வகையில் சித்திரிக்கப்பட்டிருக்கும் 'மகர' வில் யானையின் அடிப்பாத வடிவம், மீனின் உடல் வடிவம், சிங்கத்தின் பாதம், பண்றியின் இன் காதுகள், குரங்கின் பல் வடிவம், அன்னத்தின் வால் வடிவம் அடங்கி உள்ளது.


களனி விகாரையின் பிரதான வணக்கத்தலம் ஒரு மீற்றர் உயரமுள்ள கல்லில் கட்டப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு பகுதிகள் உள்ளடங்கி இருக்கின்றன. இவ்வணக்கப் பகுதியின் வெளிச் சுவரில் செதுக்கப்பட்ட உருவங்கள் மூன்று வரிசையில் காணப்படு



இலக்குவன் விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்யும் காட்சி

நன்றி -RAMAYANA IN LANKA நூல்

## பௌத்த கட்டிடக் கலைக்கு சிறந்ததோர் உதாரணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கின்றன. கல்லிலான அன்னங்கள், யானைகள் ஆகியன வரிசையில் உள்ளன. இவ்வுருவங்களுக்கு மேல் கல்லின் முகப்பில் இந்துக் கடவுளரின் சிலைகள் காணப்படுகின்றன. விநாயகர், கங்கா தெய்வம், விஷ்ணு, விபீஷனா, மைத்ரி போதிசத்வ மற்றும் முருகப்பெருமானின் சிலைகள் உள்ளன. விகாரையின் வாசலில் மரபு ரீதியான 'சந்த கட பஹன' (சந்திரக் கல்) காணப்படுகின்றது. இது அர்த்த சத்திர வடிவுள்ள கல்லாகும். இது வணக்கத்தலத்துக்கு செல்ல ஆரம்ப வழியாக உள்ளது. அந்தப் பாதையின் இரு மருங்கிலும் 'கஜ சிங்கங்கள்' காணப்படுகின்றன. இவை சிங்கத்தின் உடலையும் யானையின் தலையையும் கொண்ட உருவங்களாகும்.

உள்ளே உள்ள இரு மண்டபங்களிலும் தமிழகக் கோவில்களின் ஓவியங்களின் செல்வாக்கு உள்ளதை அவதானிக்க முடியும். புராணக் கதைகளின் சம்பவங்களை சோலியஸ் மென்டிஸ் சுவர்களில் கண்ணைக் கவரும் ஓவியங்களாகத் தீட்டியிருக்கிறார்.




இவை புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் ஜாதகக் கதைகளைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன் புராண இதிகாசக் கதைகளின் சம்பவங்களும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இருளாக்கப்பட்டுள்ள மண்டபத்தில் முக்கியமாகக் காணப்படுவது 8 மீற்றர் உயரமான புத்தர் சயன உருவச் சிலையாகும். பகலில் வாசலில் இருந்து வரும் வெளிச்சமே உள்ளே பரவி இருக்கக் காணமுடியும். அத்துடன் புத்தரின் தியானத் தோற்ற உருவச்சிலைகளும் காணப்படுகின்றன. அவ்வுருவச் சிலையின் காலடியில் வேறு தெய்வங்களின் உருவச்சிலைகள் காணப்படுகின்றன.

இந்த வழிபாட்டுத் தலத்துக்கு அருகில் ஒரு ஸ்தூபி உள்ளது. மணியக்கிக அரசனின் வேண்டுகோளுக்கிணங்க புத்தர் பெருமான் முத்துகள் பதிக்கப்பட்ட சிம்மாசனத்தில் இருந்து போதனை செய்த இடம் இந்த ஸ்தூபி இருக்கும் இடம் எனக் கூறப்படுகிறது. இந்த ஸ்தூபியின் உள்ளே அந்த முத்துக்கள் பதிக்கப்பட்டு கட்டப்பட்டதாகக் கூறுவர்.

கோவில் வழிபாட்டு இடத்துக்கு இடது புறமாக உயரமான கல் மேடையில் ஓர் அரசமரம் உள்ளது. இங்குள்ள கட்டிடங்களையும் மற்றும் ஓவியங்கள், உருவச் சிலைகள் ஆகியவற்றைத் தரிசிப்பதற்கு ஏராளமான மக்கள் இக்கோவிலுக்கு விஜயம் செய்கிறார்கள்.

- லக்ஷ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஒல்லாந்தர் ஆட்சியின் சுவடுகள் கூறும் ஓர் நூதனசாலை

**1656 ஆம் ஆண்டு கொழும்பு கைப்பற்றப்பட்டது முதல் ஒல்லாந்தர் வரலாறு இலங்கையுடன் பிணைப்புற்றுக் காணப்படுகிறது. 1656-1795 காலப்பகுதியில் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழிருந்த பிரதேசங்களுக்கு இடையில் இருந்த தொடர்புகள், ஒத்த இயல்புகள், வேற்றுமைகள் என்பன கீழ்க்காணும் ஐந்து அம்சங்களின் கீழ் விளக்கப்பட்டு, தொல்பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. நிர்வாகம், இராணுவம், பொருளாதாரம், நாளாந்த வாழ்க்கை, சமயம், கல்வி என்பனவே அவையாகும்**

கொழும்பு 11, புறக்கோட்டை, குமாரவீதி (பிரின்ஸ் வீதி), மிகமுக்கியமான, மிகச்சுறுசுறுப்பு மிக்க வர்த்தக ஸ்தானம். தொலைபேசியில் கூட பேச முடியாதளவுக்கு வாகனங்களின் இரைச்சல்களும், வியாபாரிகளின் கூச்சல்களும் நிறைந்த சனநெருக்கடியான ஓரிடம். இருந்தும் 95 ஆம் இலக்கக் கட்டிடத்திற்குள் நுழைந்துவிட்டால், 318 வருடங்களின் பழமை பேசும் மகிமைமிக்க, முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலைக்குள் நாம் அழைத்துச் செல்லப்பட்டு விடுகின்றோம். வெளியில் இருக்கும் இரைச்சல்களும் கூச்சல்களும் நமது காதுகளுக்கு கேட்பதில்லை. எந்தச் சுட்டெரிக்கும் வெய்யிலாக இருந்தாலும் குளுகுளு குளிர்மை இதற்குக் காரணம் இந்தக் கட்டடத்தின் கட்டுமான தொழில்நுட்பமே!

ஒல்லாந்தர் காலத்து நூதனசாலையாக இயங்கும் இக் கட்டடம் 1692 இல் கவர்னர் தோமஸ் வான்றீ என்பவரால் கட்டப்பட்டதாகும் இது கவர்னர் இல்லமாக நான்கு வருடங்கள் பயன்படுத்தப்படட்டது. 1696 இல் கவனரால் டச்சு கிழக்கிந்திய கம்பனிக்கு விற்கப்பட்ட பின் கொழும்பு செமினரியாக இயங்கியது. 1796 இல் ஒல்லாந்தர் ஆட்சி முடிவுக்கு வரும்வரை மத போதனை இடமாகவும் அனாதைகள் விடுதியாகவும் இவ்வில்லம் செயற்பட்டது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இராணுவ வைத்திய சாலையாகவும், யுத்த தளபாட களஞ்சிய சாலையாகவும், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியாகவும், தபாற் கந்தோராகவும் இக்கட்டடம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1982 ஜூலை மாதம் ஒல்லாந்தர் காலத்து நூதனசாலையாக உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

அரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக்கட்டடம், ஒருமாடியைக் கொண்டதாகும். மேல்மாடியிலேயே கவர்னரின் படுக்கை அறை இருந்திருக்கிறது. இங்கிருந்து கொழும்பு துறைமுகப் பணிகளை, வந்து நிற்கும் கப்பல்களை கண்காணிக்க முடியும். (இந்தக் கட்டடம் தான் ஒல்லாந்தர் காலப்பகுதியில் கொழும்பு நகரில் மிக உயர்ந்த கட்டமாக இருந்தது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





140 வருடகால ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் வரலாற்றுச் சான்றுகளைப் பகிரக் கூடியவாறு இங்கு சேகரிக்கப்பட்டிருக்கும் பொருட்கள், ஒல்லாந்தரின் கடற்பயண நடவடிக்கைகளையும், கண்டி மன்னர்களுடன் அவர்கள் கொண்டிருந்த நட்புறவு களையும் பறைசாற்றுகின்றன. ஆயுதங்கள், வீட்டு பாவனைப் பொருட்கள், வரைபடங்கள், சித்திரங்கள், தளபாடங்கள், ஒல்லாந்தர் ஆடைகள், சமயலறை உப கரணங்கள், கல்வெட்டுக்கள், மட்பாண்டங்கள், விளக்குகள், அலங்காரப் பொருட்கள் காணப்படுகின்றன.



ஒல்லாந்தர் கால பீரங்கி, டச்சு கிழக்கிந்திய கம்பனியின் தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நாதமணி (1768 இல் தயாரிக்கப்பட்ட இம்மணியில் தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன), தண்ணீர்த் தாங்கி (கப்பல் பயணங்களின் போது இந்தத்தாங்கியில்தான் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகின்றது), கல்லறைக் கற்கள் (புறக்கோட்டையிலும் பழைய ஒல்லாந்தர் மயானங்களிலும் பெற்றுக் கொள்ளப் பட்டவை. ஒவ்வொரு கல்லிலும் மரணத்தை உணர்த்தும் சின்னம் காணப்படுகி ன்றது.), ஜன்னல் பூட்டு, கருங்காலி மரத்திலான ஒல்லாந்தர் காலத்து நாற்காலி, பலா மரத்திலான ஒல்லாந்தர் காலத்து அலுமாரி (கால்களில் செதுக்குவேலை வடிவங்கள் காணப்படுவது இதன் பெருமை), பலா, முதிரை மரங்களிலான மூலை நாற்காலி, கருங்காலி மரத்திலான பல்லாக்கு, பலா மரத்திலாலான ஒல்லார்தர் காலத்துக் கட்டில், இரகசிய இழுப்பறை கொணட பெட்டகம், மடக்கத்தக்க மேசை, 318 ஆண்டுகள் பழமையான மாடிப்படி உட்படப்பல பழைய பொருட்கள் இங்கு கானப் படுகின்றன.

- பி. ஜோன்சன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு மணப்பெண் அலங்காரங்கள்

அனுஷா சுந்தரேசன் உடன் நேர்காணல்



அழகு என்பது இறைவன் கொடுத்த வரம். ஆனாலும் அந்த வரத்தை மேலும் மெருகுபடுத்திக் கொள்வது சிறப்பாகும். இந்தவகையில் அழகுக்கலையில் ஈடுபட்டு சிறப்பான பணியைக் கடந்த பத்து வருடங்களாக செய்து வரும் பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி அனுஷா சுந்தரேசன் கலைக்கேசரிக்கு வழங்கிய நேர்காணல்..

நான் என்னுடைய தொழில் துறையை நேசிக்கிறேன்.. சுவாசிக்கிறேன்.. உண்மையில் இது ஒரு ***FASHION CINEMA***.



**? இன்று பிரபலமான அழகுக்கலை நிபுணராக விளங்கும் நீங்கள் இந்தத் துறையை எவ்வாறு தேர்ந்தெடுத்தீர்கள்?**

உண்மையில் இது ஒரு விபத்து. நான் முற்றிலும் மாறுபாடான துறையைச் சேர்ந்தவள். என்னுடைய துறை *Industrial Management*. நான் ஒரு *Industrialist* ஆக வர வேண்டும் என்பது என்னுடைய கனவாக இருந்ததுடன் சிறுவயதில் பல கடமைகளும் பொறுப்புகளும் இருந்தன. அது மாத்திரமல்லாமல் நான் நன்றாக படங்கள் வரைவேன்.

**? அப்படியென்றால் சிறுவயதில் உங்களிடம் இருந்த கலை உணர்வு எவ்விதமாக வெளிப்பட்டது? இதற்கு தூண்டுகோல் யார்?**

முக்கியமாக நான் இன்று இந்த நிலையில் இருப்பதற்கு என்னுடைய அம்மாதான் முழுமையான காரணம். அம்மாவின் வழிகாட்டலின் காரணமாக நான் சிறந்த ஒரு நிலையை எட்டியிருக்கிறேன்.

**? நீங்கள் தற்செயலாக தேர்ந்தெடுத்த துறை உங்களை ஒளிரவைத்திருக்கிறது. அதுபற்றி?**

எனக்கு *pimples* இருந்தது. அதற்காக நான் ஒரு அழகு சிகிச்சை நிலையத்திற்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு அழகு சம்மந்தமான கற்கை நெறிகள் உண்டு. முதலில் நான் விளையாட்டாக அதில் சேர்ந்தேன். ஆரம்பத்தில் எனக்கு அதில் ஈடுபாடு இருக்கவில்லை. ஆனாலும் நான் நன்றாக வரைவேன். அதன் காரணமாக என்னால் அங்கு ஜொலிக்க முடிந்தது. அந்த சந்தர்ப்பத்தில்தான் உண்மையில் எனக்கு ஈடுபாடு வந்தது. அப்போது நான் நினைத்தேன் இந்த தொழிற்துறையை நான் ஏன் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று. அந்தக்கணம் தோன்றிய எண்ணக்கரு காரணமாக நான் நல்ல ஒரு பெயரை எடுத்திருக்கிறேன்.

**? நீங்கள் தேர்ந்தெடுத்த துறை சரியான துறை என எண்ணத்தோன்றுகிறதா?**

நிச்சயமாக.. நான் என்னுடைய தொழில் துறையை நேசிக்கிறேன், சுவாசிக்கிறேன். உண்மையில் இது ஒரு *fashion cinema*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தை மாதம் என்றால் திருமணங்கள் அதிகமாக இடம்பெறும் மாதம் என்று கூறலாம். சாதாரணமாக தோன்றும் ஒரு பெண்ணை எப்படி பேரழகியாக மாற்றுகிறீர்கள்?**

*correctly make-up, straight make-up* என்று இரண்டு வகை *make-up* உண்டு. சாதாரண விழாக்களுக்கு *straight make-up* செய்வோம். இதன் மூலம் இருக்கும் அழகை கொஞ்சம் அதிகமாக காட்டலாம். மணப்பெண்ணைப் பொறுத்தவரை திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு தரம். அதுமாத்திரமல்லாமல் அந்த விழாவின் நாயகி. விழாவிற்கு வருவோரில் இருந்து தனித்து சிறப்பான எழிலுடன் தோன்றவேண்டும். எனவே *bridal make-up* இற்கு நாங்கள் correctly make-up முறையை கையாளுவோம். சிலருக்கு மூக்கு பெரியதாக இருக்கலாம். சிலருக்கு முகம் வழமையை விட மாறுதலாக இருக்கலாம். ஆனால் *correctly make-up* மூலம் மணப்பெண்ணின் குறைபாடுகளை திருத்தி மணப்பெண்ணை விழாவின் நாயகியாக மாற்றுவோம்.

**ஒரு மணப்பெண் திருமணத்திற்கு எவ்வளவு காலம் முன்பு உங்களை தொடர்பு கொள்ளவேண்டும்?**

அது ஒருவருடைய *skin* னைப் பொறுத்தது. சில பேர் ஒரு மாதத்திற்கு முன்னர் வரவேண்டும். சிலருக்கு தோலில் ஒவ்வாமை இருக்கலாம். அப்படியானவர்கள் ஒரு வருடமாக சிகிச்சைஎடுக்க வேண்டும். ஆனால் பொதுவாக ஆறு மாதகாலம் அவசியமாக தேவைப்படுகிறது. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற மணப்பெண்கள் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்னர் கூட வருவார்கள். கிடைக்கும் நேரத்திற்குள் சிறந்த ஒரு சேவையை வழங்கி வருகிறோம்.

**கலை கலாசாரம் சம்பந்தமாக கலைக் சேசரி எனும் புதிய மாத சஞ்சிகையைஆரம்பித்திருக்கிறோம். இது தொடர்பாக எதாவது கருத்துக் கூறுவீர்களா?**

உண்மையில் இலங்கையிலிருந்து தமிழ் மொழியில் சர்வதேசரீதியாக வரவேற்புப் பெறக்கூடிய *art & culture magazine* இன் தேவை உள்ளது. என்னைப்போன்ற கலைஞர்கள் ஆவலோடு அதனை வரவேற்கிறோம். வாழ்த்துகிறோம்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தனது துறையில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருக்கும் அனுஷாவின் வெற்றியின் இரகசியத்தை அவரது அழகு நிலையத் திற்கு நேரடியாக சென்றபோது நாம் உணர முடிந்தது. எத்தனை வேலைகளுக் கிடையிலும் ஒரு நொடி கூட மாறாத புன்னகைதான் அவருடைய வெற்றியின் இரகசியம். தொடரட்டும் புன்னகை!





**மணப்பெண்ணைப் பொறுத்தவரை திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு தரம். அதுமாத்திரமல்லாமல் அந்த விழாவின் நாயகி. விழாவிற்கு வருவோரில் இருந்து தனித்து சிறப்பான எழிலுடன் தோன்றவேண்டும்.**



**நேர்காணல்: உமா பிரகாஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் படைப்பிலக்கியத்தை ஆய்வு செய்பவர்


## கவிஞர் சு. குணேஸ்வரனுடன் ஓர் அறிமுக சந்திப்பு

புலம்பெயர் இலக்கியம் நம் நாட்டுத் தமிழ் இலக்கியத்தின் ஓர் அம்சமாகி விட்டது. ஏனெனில் அதன் அர்த்தங்கள் நம் நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து மேற்கு நாடுகள் பலவற்றிற்கும் சென்ற நமது எழுத்தாளர்கள். இவர்களது ஆக்கங்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்குபவர் திரு. சு. குணேஸ்வரன்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரி. பெயர் பெற்ற கவிஞர். நூலாசிரியர். பாடசாலை ஆசிரியரும் கூட. ஆய்வு நோக்கும் படைப்புத் திறனும் கொண்ட இவ்வாசிரியரை அண்மையில் நாம் சந்தித்த போது, இவரது எழுத்துச் செயற்பாடுகள் குறித்து, பல விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

திரு. குணேஸ்வரன் தமது இலக்கிய ஆர்வத்துக்கான சூழலையும் தமது ஆரம்ப எழுத்து முயற்சிகள் குறித்தும் எம்மிடம் பேசும் போது பின்கண்டவாறு குறிப்பிட்டார்.

"தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த கெருடாவில் கிராமம் எனது சொந்த ஊராகும். திருமணம் செய்து கொண்ட பின் அல்வாய் ஊரில் வாழ்கிறேன்.






கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் எனது ஆரம்பக் கல்வியைக் கற்றேன். தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் க. பொ. த. சாதாரண கல்வியைக் கற்ற நான் க. பொ. த. உயர்தரக் கல்வியை அமெரிக்க மிஷன் கல்லூரியில் கற்றுத் தேறினேன்.


வாசிப்பு ஆர்வமில்லாமல் எதுவும் சாத்தியமாகாது. எனது வீட்டுச் சூழல் எனது வாசிப்புக்கும் எழுத்துக்கும் ஊக்கம் தரும் ஒரு சூழலாகவே இருந்தது. எனது தாயும் தந்தையும் எனக்கு இவ்விடயத்தில் ஊக்கம் தருபவர்களாக இருந்தார்கள். எனது தந்தை ஒரு கடை வைத்து நடத்தி வந்தார். வியாபார விடயமாக நான் பக்கத்து ஊர்களுக்குப் போய் வரும் போது எனது கையில் தரும் பணத்துக்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாங்கி வந்து படிப்பேன்.

எங்களூரில் விவேகானந்த சனசமூக நிலையம் ஒன்றிருந்தது. அதனுடன் ஒரு நூல் நிலையமும் இருந்தது. அந்நூல் நிலையத்தையும் நான் பயன்படுத்திக் கொண்டேன். அங்கு எனக்கு நண்பர்களும் இருந்தார்கள்.

உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் வெரித்தாஸ், பி. பி. ஸி., பீக்கிங் வானொலி ஆகியவற்றை நானும் நண்பர்களும் ஆர்வமாய் செவிமடுப்போம். எமது கருத்துகளையும் அவ்வானொலிகளுக்கு எழுதுவோம். அதை அவர்கள் ஒலிபரப்புவதுடன் பெருநாள் வாழ்த்து மடல் போன்றவற்றில் அதனை அச்சில் பதித்து எமக்கும் அனுப்புவர்கள். அது எமக்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தருவதுடன் எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஊக்கத்தையும் எமக்குத் தந்து கொண்டிருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். 1985 ஆம் ஆண்டில் நண்பர்கள் ஒன்று சேர்ந்து 'அறிவொளி' என்ற கையெழுத்துச் சஞ்சிகையையும் நடத்தினோம்.

இக்காலகட்டத்தில் நான் சிறு சிறு கவிதைகளையும் எழுதிக் கொண்டிருந்தேன். யாழ். கிறிஸ்தவ அமைப்பு ஒன்று 'புதிய உலகம்' என்றொரு சஞ்சிகையை வெளியிட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அந்தப் பத்திரிகை எனது கவிதைகளைப் பிரசுரித்து ஊக்கம் தந்தது. வேறு பத்திரிகைளுக்கும் சிறு சிறு விடயங்களை எழுதினேன்.

மற்றுமொரு முக்கியமான விடயத்தையும் குறிப்பிட வேண்டும். எங்களூரில் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் என ஓர் அமைப்பு இருந்தது ஏ. எல். சோதனை எழுதியதன் பின் (1990) ஒரு 8 மாத காலம் அங்கு சுருக்கெழுத்துப் படித்தேன். அவ்வேளை எங்கள் ஆசிரியர் கவிதை எழுதி வாசிக்கும்படி ஊக்கந் தருவார். அங்கு வருடாந்த விழா நடக்கும். அதில் கவியரங்கை ஏற்பாடு செய்து கவிதைகளை எழுதி வாசிப்போம்.

ஆனால் இக்கவிதைகளின் பொருள், சுருக்கெழுத்து, தட்டெழுத்து சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது முக்கியம். அத்தோடு இளைஞர்களாகிய நாம் ஒன்று சேர்ந்து, ''கலை இலக்கிய சாகரம்'' என்னும் அமைப்பின் மூலம், கவியரங்கம், பட்டிமன்றம் போன்றவற்றினையும் நடத்தினோம். 'சக்தி' என்றொரு சஞ்சிகையையும் ஆரம்பித்து நடத்தி, ஒன்றிரண்டு சஞ்சிகையுடன் நின்று விட்டது.

1992 இல்தான் நான் மல்லிகை 'சஞ்சிகையைத் தெரிந்து கொண்டேன். அப்போது நான் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலம். அதில் 'விடிவு' என்றொரு கவிதையை எழுதினேன். அதன் பின் அதில் ஏதும் எழுதவில்லை. இதுதான் எனது ஆரம்ப கால எழுத்து ஊக்கப்பாட்டிற்கான சூழல்'' என்றார் குணேஸ்வரன்.

''எழுத்து ஊக்கத்திற்கான ஓர் வாய்ப்பான சூழலை நீங்கள் பெற்றிருந்தமை அதிஷ்டம்தான். அடுத்து உங்கள் படைப்பு முயற்சிகள் எவ்விதம் வளர்ச்சி பெற்றன என்பதைக் கூறுங்கள்'' எனக் கேட்ட போது,

''கவிதைகளை என்னிஷ்டம் போல் எழுதி, அவை பிரசுரம் பெற்றும் கவியரங்குகளில் படிக்கப் பெற்றும் வந்தன என்றாலும் கவிதைகளை ஆய்வு ரீதியாகப் படிக்க ஆரம்பித்தது யாழ். பல்கலைக்கழகம் சென்ற பின்னர்தான்.

அங்கு நான் கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி, முதலாம், இரண்டாம் பரிசுகளையும் பெற்றுள்ளேன் எனக் குறிப்பிட்டார். தான் புதுக் கவிதைகளைத் தான் எழுதி வருவதாகவும் கூறினார்.

புதுக் கவிதைகள் எழுதுபவர்கள் மரபுக் கவிதைகளை அறிந்திருத்தல் அவசியமில்லை என்று கருதுகிறீர்களா? என வினவியதற்கு, ''அடிப்படையில் ஒரு நல்ல வாசகனாக இருப்பது அவசியமானது. மரபுக் கவிதைகளையும் கட்டாயமாக வாசிக்க வேண்டும். மரபினைக் கட்டாயமாக தெரிந்து கொள்ள வேண்டும். பாகுபாடின்றி மரபுக் கவிதை புதுக்கவிதை யாவற்றையும் வாசிக்க

**"என் பட்டப்படிப்புக்கு புலம்பெயர் இலக்கியத்தை ஆய்வு செய்த நான், இதன் தொடர்ச்சியாக என் கலாநிதிப் பட்டத்திற்கு புலம்பெயர் நாவல்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறேன். கிட்டத்தட்ட நூறு நாவல்கள் மற்றும் குறுநாவல்களை ஒரு நுண்ணாய்வுக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது."**

வேண்டும். மரபுக் கவிதை எழுதுபவர்கள், எதுகை மோனை, சந்தம் உவமை போன்ற அணிகளைச் சேர்த்துக் கொண்டிருப்பதைப் போல புதுக் கவிதையாளர்கள் குறியீடு, படிமம் போன்றவற்றை சேர்த்துக் கொள்கிறார்கள்.''

தமக்குப் பிடித்தமான கவிஞர்கள் குறித்து திரு. குணேஸ்வரன் கூறும்போது, ''ஆரம்பத்தில் நான் அப்துல் ரஹ்மான், வைரமுத்து ஆகியோரின் கவிதைகளைத்தான் விரும்பிப் படித்தேன். மனுஷ்ய புத்திரன், சிபிச் செல்வன், பிரேமிள், ஆத்மாராம், ஞானக்கூத்தன் போன்றவர்களின் கவிதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை, பொதுவாக எல்லாக் கவிஞர்களின் கவிதைகளும் எனக்குப் பிடிக்கின்றன. ஒவ்வொரு படைப்பாளியினதும் ஆளுமையைத் தனித்தனியாகப் பார்க்க வேண்டும்'' என்றார்.

புலம்பெயர் படைப்பிலக்கியம் குறித்து நுண்ணிய பார்வையை செலுத்தி கட்டுரைகளை பத்திரிகைகளிலும் இணையத்தளத்திலும் எழுதி வந்திருக்கிறீர்கள். இது விடயத்தில் ஆர்வமாக ஈடுபட்டு வந்தமைக்கு காரணம் ஏதுமுண்டா? என்று வினவிய போது அவர் தந்த பதில் விரிவானது. அவர் கூறியதாவது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"எந்த ஒரு கவிஞனும் அடிப்படையில் ஒரு நல்ல வாசகனாக இருக்க வேண்டும். பாகுபாடின்றி மரபுக் கவிதையையும் புதுக் கவிதையையும் வாசிக்க வேண்டும்."**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1999 ஆம் ஆண்டு தமிழை சிறப்புப் பாடமாகக் கொண்டு, பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றேன். 2006 ஆம் ஆண்டு முது தத்துவமாணிப் பட்டம் (M. Phil) பெற்றுக் கொண்டேன்.

இப்பட்டத்துக்குரிய ஆய்வாக எந்தப் பொருளை எடுத்துக் கொள்வது என்ற விடயத்தில் எனது பேராசிரியர்களுடன் கலந்துரையாடினேன். கலாநிதி நா. சுப்பிரமணியன் புலம்பெயர் இலக்கியத்தினை அறிமுகம் செய்தார். பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் நாட்டாரிலக்கியத்தில் மலையகத்தின் பங்களிப்பை எடுத்துக் கூறினார். பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் ஈழத்து இலக்கியத்தில் கவிதை விடயம் குறித்துப் பேசினார். ஆனால் இவ்விடயங்கள் ஏற்கனவே ஆராயப்பட்ட விடயங்கள் ஆக இருப்பதனால் புலம்பெயர் இலக்கியம் புதிய தொரு கூறாக இருப்பதினால் அது குறித்து அய்வு செய்யலாம் எனக் கூறினார்கள். எனவே அவ்விடயம் குறித்து எனது ஆய்வுகளைத் தொடர்ந்தேன்.

இதன் தொடர்ச்சியாக எனது கலாநிதிப் பட்டத்துக்கு 'புலம் பெயர் நாவல்கள்' என்னும் பொருளை ஆய்வு விடயமாக கொண்டிருக்கிறேன்.

இதற்கு கிட்டத்தட்ட நூறு, நாவல் மற்றும் குறுநாவல்களை ஒரு நுண்ணாய்வுக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது. இதனை நான் மேற்கொண்டு வருகின்றேன். விமல் குழந்தை வேல், வி. தியாகலிங்கம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், பார்த்திபன், அ. முத்துலிங்கம், எஸ். பொன்னுத்துரை, கி. செ. துரை, வ. ந. கிரிதரன், மா. கி. கிறிஸ்ரியன், செழியன், கருணாகர மூர்த்தி, ஜெ யபாலன் எனப் பலரும் புலம்பெயர் வாழ்வு குறித்து நாவல்களையும் குறுநாவல்களையும் படைத்திருக்கிறார்கள். இத்தகைய நாவல்களைத் தேடி ஆராய்ந்து வருகிறேன்'' என்று கூறினார்.

பொதுவாக இப்படைப்புகளில் நீங்கள் அவதானிக்கும் அம்சங்கள் என்ன? என்ற வினாவுக்கு அவர் தந்த பதில் இது -


''பொதுவாக இப்படைப்புகளை நோக்கும் போது பண்பாட்டு அதிர்ச்சி மேலோங்கி நிற்கும் ஒரு பண்பாகும். அடுத்தது ஈழத்து அரசியல் முரண்பாடுகள் குறித்து, கருத்தினைச் சுதந்திரமாக வெளியிடக் கூடிய ஒரு தன்மையில் பார்க்க முடிகிறது. அடுத்து நிறவாதம், இனவாதம், வாழ்வியல் சூழல், அகதி நிலை ஆகியன குறித்து விடயங்களையும் பார்க்க முடிகிறது.

இதிலும், புலம்பெயர்ந்த காலத்து ஆரம்பக் கால முயற்சிகளில் தாயக வாழ்வு குறித்த சிந்தனைகள், ஏக்கங்களாகவும் பிந்தியது புலம் பெயர் வாழ்வு குறித்தாகவும் அமைவதை அவதானிக்க முடிகிறது.

புலம் பெயர் இலக்கியம் தொடர்பாக இவர் எழுதிய கட்டுரைகளை தொகுத்து, 'அலைவும் உலைவும்' என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கிறார். தவிரவும் அம்மா, வெளிநாட்டுக் கதைகள், கிராமத்து வாசம் ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியராகவும் திரு. குணேஸ்வரன் உள்ளார். தற்போது இவர் யாழ்ப்பாணம், அம்பன் அ. மி. த. க. பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரது கவிதை நூல் பற்றிக் கேட்ட போது, 'துவாரகன் என்ற பெயரில் நான் எழுதிய கவிதைகள் 'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்'' என்றும் தலைப்பில் நூலாக வெளிவந்தது.

இந்த நூல் 2008 ஆம் ஆண்டின் பிறந்த கவிதை நூலுக்கான வடமாகாண இலக்கிய விருதினையும் பெற்றிருக்கிறது. யாழ். இலக்கிய வட்டத்தின் கவிஞர் ஐயாத்துரை நினைவுப் பரிசு இந் நூலுக்கும் கிடைத்திருக்கிறது. இதில் பெண்ணியாவுக்கும் பரிசு கிடைத்துள்ளது'' எனக் கூறினார். புலம்பெயர் இலக்கியத்தில் தமது ஆய்வினைத் தொடர்ந்து வரும் இவ்விளம் கவிஞருக்கு எமது வாழ்த்தினையும் நன்றியையும் தெரிவித்து விடை பெற்றோம்.

**நேர்முகம் : அன்னலட்சுமி இராஜதுரை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பத் வங்கி

# '2009 ஆம் ஆண்டின் சிறந்த வங்கி'

லண்டன் Financial Times Limited நிறுவனத்தின்
'The Banker' சஞ்சிகையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வங்கித்துறையில் பழைமை வாய்ந்த முன்னோடிகள் மற்றும் தொடர்ச்சியான சாதனையாளர்கள் என்ற வகையில் சம்பத் வங்கி தீர்க்கமான முடிவுகளுடன் 'Bank of the Year 2009' என்ற விசேட கௌரவத்தினை லண்டனின் Financial Times Limited நிறுவனத்தின் 'The Banker' சஞ்சிகை மூலம் பெற்றுக்கொண்டது.

எமது செயற்பாடுகளும் உறுதியான நிதி நிலைப்பாடும் உலக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த வேளையில் எதிர்காலத்தில் எமது தாய்நாட்டின் சுபீட்சத்திற்காக சிறந்த பங்களிப்பை வழங்குவோம் என உறுதிகொள்கிறோம்.

The Banker
Bank of the Year 2009
SRI LANKA



www.sampath.lk

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப்பெருஞ்சுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனப் பெருஞ்சுவர் யாலு நதியிலுள்ள கொரியாவுடனான எல்லையிலிருந்து கோபி பாலைவனம் வரை 6,400 கி.மீ அளவுக்கு நீண்டு செல்கிறது. ஆறாம் நூற்றாண்டிலிருந்து மங்கோலியாவிலிருந்தும், மஞ்சூரியாவிலிருந்தும் வந்த 'சியோங்னு'களின் படையெடுப் புகளிலிருந்து சீனப் பேரரசைக் காப்பதற்காக அதன் வடக்கு எல்லையில் கட்டப்பட்ட அரண் ஆகும். மிங் வம்சக்காலத்தில், இச்சுவர்ப் பகுதியில் 10 இலட்சம் படையினர் வரை காவல் கடமையில் ஈடுபட்டி ருந்ததாகத் தெரிகிறது. பல நூற்றாண்டுகளாக இடம் பெற்ற இச்சுவரின் கட்டுமானப் பணிகளின்போது 30 இலட்சம் மக்கள் வரையில் இறந்திருக்கக்கூடும் எனக் கணிக்கப்படுகிறது. சுவரின் கட்டுமானப் பணிகளின்போது பலர் இறந்த காரணத்தால் இச்சுவர் உலகின் அதி நீளமான மயானம் என்றும் அழைக்கப்படுவதுண்டு.

பெய்ஜிங்குக்கு வடக்கே சுற்றுலா மாளிகைகளுக்கு அண்மையில் உள்ள பகுதிகள் பாதுகாக்கப்பட்டும், சில வேளைகளில் மீளமைப்புச் செய்யப்பட்டு இருந்தாலும் ஏனைய இடங்களில் சுவர் நல்ல நிலையில் இல்லை. திருத்த வேலைகள் எதுவுமின்றி இருந்த சுவரின் சில இடங்களில், விளையாட்டு மைதானங்களாகவும் வீடுகளும் சாலைகளும் அமைப்பதற்குக் கற்கள் எடுக்குமிடமாகவும் பயன்படுகின்றது. ஜூன் 2003 வரை சீன அரசாங்கம் சுவர்ப் பாதுகாப்புக்கான எந்தச் சட்டத்தையும் உருவாக்கவில்லை.

சீனப் பெருஞ் சுவர்ச்சங்கம் சுவரைப் பாதுகாப்பது தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ளது. கான்சு மாகாணத்திலுள்ள 60 கிலோமீட்டர் நீளமான இச்சுவரின் பகுதி, மணற்புயலினால் ஏற்படும் அரிப்பினால் இன்னும் 20 ஆண்டுகளுக்குள் அழிந்துவிடக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

இந்தச் சுவர் ஒரே தனி முயற்சியின் கீழ் கட்டப்படவில்லை. கி.மு ஐந்தாம் நூற்றாண்டுக்கும் கி.மு 221 நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், சீனாவுடன் சண்டையிட்டு வந்த சியான், சாவோ ஆகிய நாடுகளினால் தங்கள் சொந்தப் பாதுகாப்புக்காகக் கட்டப்பட்ட பல்வேறு தனித்தனியான சுவர்களின் ஒன்றிணைப்பால் பெறப்பட்டது. இச்சுவர்கள் பொதுவாக இறுக்கப்பட மண், சரளைக் கற்கள் என்பவற்றினால் கட்டப்பட்டு, வாள், ஈட்டி போன்ற சிறு ஆயுதங்களைத் தாக்குப் பிடிக்கக் கூடியனவாக இருந்தன. கிமு 221 இல் சின் ஹுவாங் எதிரி நாடுகள் அனைத்தையும் கைப்பற்றி சீனாவை ஒன்றிணைத்து சிங் வம்ச அரசை நிறுவினார்.

மையப்படுத்திய ஆட்சியை நடத்துவதற்காகவும், நிலப் பிரபுக்கள் மீண்டும் வலுப்பெறுவதைத் தடுக்கவும், தனது பேரரசுக்கு உட்பட்ட நாடுகளின் இடையில் அமைந்திருந்த எல்லைச் சுவர்களை இடித்துவிட அவர் ஆணையிட்டார். இடையிடையே காணப்பட்ட இடைவெளிகளையும் நிரப்பி வடக்கு எல்லைச் சுவரை முழுமைப்படுத்தினார். பின் வந்த வம்சங்களினால் திருத்தப்பட்டும், விரிவாக்கப்பட்டும் வந்த இச்சுவர், மிங் வம்ச ஆட்சிக் காலத்தில் தற்போதைய வடிவத்தைப் பெற்றது.

சீனப் பெருஞ் சுவரில் குறிப்பிடத்தக்க முக்கிய பெரும் பகுதியாக முதல் கடவையைக் கூறலாம். இச்சுவர் ஏறும் முதல் மலையான க்ஷான் குவாய்னில் கட்டப்பட்டது. இச் சுவரில் பாலமாகக் கட்டப்பட்ட ஒரே பகுதியான ஜியோமென்கூ உள்ளது. சோங் வம்சக் காலத்தில் கட்டப்பட்ட மெங் ஜியாங்-நு கோயில் இங்கிருப்பதால் இப்பகுதி 'பெருஞ் சுவர்க் கட்டு மானத்தின் அருங்காட்சியகம்' எனப் படுகிறது.

பெருஞ்சுவரின் நீளம் முழுவதும் இருந்த படையினருக்கு இடையேயான தகவல் தொடர்புகளும், தேவையான போது கூடுதல் படைகளை அழைப்பதற்கான வசதிகளும், எதிரிகளின் நகர்வுகள் குறித்து, பாசறைகளில் இருந்த படைகளை எச்சரிக்க வேண்டியதும் முக்கியமான தேவைகள்.

இதனால் இம் மலை முகடுகளிலும், இச் சுவர்ப் பகுதிகளில் அமைந்த பிற உயரமான பகுதிகளிலும் சமிக்ஞைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருஞ்சுவர் மண், கற்கள், மரம் ஆகியவற்றைப் பயன்படுத்தியே கட்டப்பட்டிருந்தது. மிங் வம்சக் காலத்தில், சுவரின் பல இடங்களில் செங்கற்களும், கற்கள், ஓடுகள், சுண்ணாம்பு என்பனவும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. கற்கன் நிறை காரணமாக சுவரை உறுதியாக வைத்திருக்கக் கூடியன என்றாலும், அவற்றைப் பயன் படுத்துவது மிகவும் கடினமானது. இதனால், நீள்சதுரக் குற்றிகளாக வெட்டப்பட்ட கற்கள், அத்திவாரம், வாயில் பகுதிகள் போன்றவற்றுக்குப் பயன்பட்டன.

சந்திரனில் இருந்து பார்த்தால் புமியில் தெரியும் மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட ஒரே படைப்பு இந்தச் சீனப் பெரும் சுவர் என்று கூறப்பட்டாலும், அனுபவம் மிக்க அமெரிக்க விமானி ஜெனி சேர்னன் 160 கிமீ தொடக்கம் 320 கிமீ உயரத்திலுள்ள பூமிச் சுற்றுப் பாதையிலிருந்து சீனப் பெருஞ் சுவர் வெற்றுக் கண்ணுக்குத் தெரியவே செய்கிறது என்று கூறினார்.


சீனப் பெருஞ்சுவர் 'நவீன உலகின் ஏழு அதிசயங்களுள்' ஒன்றாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆத்துடன் 1987 இல் இது யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியக் களங்களில் ஒன்றாகப் அறிவிக்கப்பட்டது. சீன பெருஞ் சுவரின் முற்றியானு பகுதி தேசிய நான்கு A தர நிலை சுற்றுலா பிரதேசமாகும். இங்கு பெருஞ் சுவரில் பல எழில் மிக்க இயற்கை காட்சி இடங்கள் உண்டு.

இங்கு காடுகள் அடர்ந்து வளர்கின்றன. பழமையான மரங்கள் விண்ணை முட்டுகின்றன. நீண்டகால வரலாறு, வளமிக்க பண்பாடு, விநோத மான நிலவியல் அமைவு, கால நிலை ஆகியன காரணத்தால், சீன பெருஞ் சுவரின் இப்பகுதி ஒரு அருமையான சுற்றுலா பிரதேசமாகும்.

தோட்டவடிவ கலையின் கட்டிட வேலை ப்பாட்டுக்கு இணங்க கட்டப்பட்ட பெருஞ் சுவர் ஹோட்டல் புகழ் பெற்ற பெருஞ்சுவரின் அடிவாரத்தில் அமைந் துள்ளது.


இங்கு உணவகம், விடுதி, கூட்ட மண்டபங்கள் ஆகியவை உண்டு. 2001 ஆம் ஆண்டில், இது சீனத் தேசியச் சுற்றுலாத் துறையால் இரண்டு நட்சத்திர ஹோட்டலாக உறுதிப்படுத் தப்பட்டது.

**பி. ஜோன்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


USA
CANADA
SINGAPORE
CHINA
THAILAND
HONG KONG
INDIA
IDD Super SALE
செக்கனுக்கு 8 சதம்
நிலையான மற்றும் கையடக்க தொலைபேசிகளுக்கு
செக்கனுக்கு 8 சதத்திற்கு கதைக்கலாம்
BELL DIAL 15
அவுஸ்திரேலியா பிரான்ஸ் ஜேர்மன் இத்தாலி ஜப்பான் ஜோர்தான் சுவிட்சலாந்து இங்கிலாந்து டென்மார்க் சுவீடன் ஆஸ்ரியா மலேசியா நோர்வே *
லங்கா பெல் உங்களுக்கு வழங்கும் Bell IDD Super Sale மூலம் 20 நாடுகளுக்கு சுதந்திரமாக கதைக்க இப்போது செக்கனுக்கு 8 சதம் மாத்திரமே. குறைந்த IDD கட்டணங்களை நீங்கள் இன்றே அனுபவியுங்கள், லங்கா பெல் தொலைபேசியில் 15ஐ அழுத்தி IDD இலக்கத்திற்கு அழைக்கவும். உதா 1500xxxxxxxxxxxx
மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் (011) 5375375
* நிலையான தொலைபேசிகளுக்கு மட்டும்
லங்கா பெல்
இலங்கையின் தொலைபேசி தொடர்பாடல் துறையின் தனித்துவத் தலைவன்



# புகழ்மிக்க எலிபன்ரா குகைக் கோயில்

மேற்கு இந்தியாவில் குகைக் கோவில்கள் நிறையக் காணப்படுகின்றன. கிறிஸ்தவ சகாப்தத்தில் அதில் மிகவும் பழைமையான ஒரு குகை தோண்டி எடுக்கப்பட்டது. ஆரம்ப கால கட்டத்தில் இக்குகைகள் பௌத்த குணாம்சத்தைக் கொண்டிருந்தது. ஆனால் பௌத்தம் வீழ்ச்சி கண்ட காலத்துக்குப் பின் இந்துக்கள் இக்குகைக் கோவில்களை தொடர்ந்து உருவாக்கத் தொடங்கினர். மகத்தான சைவ குகைக் கோவிலான எலிபன்ரா மற்றும் குகைக் கோவில்கள் அக்காலத்தில் உருவாகின.

பின்னர் இம்மரபு நாட்டின் வேறு பகுதிகளுக்கும் பரவியது. யானைக் குகைகள் (Elephanta Cave) வரலாறு பற்றி மிகக் குறைவாகவே தகவல்கள் வெளிவந்துள்ளன. அதன் உள்ளூர் பெயர் சாரபுரி என்பதாகும்.

தீவில் உள்ள குகைக் கோவில்கள் சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை. இவை அக்காலத்தின் சைவ மறுமலர்ச்சியைக் காட்டுகின்றன.

ஆதிபரம் பொருளாக சிவபெருமான் வழிபடப்பட்டார். இப்பிரபஞ்சத்தை உருவாக்கியவராகவும் அழிப்பவராகவும் சிவபெருமான் ஆராதிக்கப்படுகிறார். வயிரவர் ரூபத்தில் அவரது கோப ரூபங்கள் காட்டப்படுகின்றன. சிவபக்தி முத்திக்கு இட்டுச் செல்லும் என்பது உறுதியாகும்.

எலிபன்ராவில் உள்ள மகேச மூர்த்தியில் சிருஷ்டி, அழிப்பு, காத்தல் ஆகிய மூன்று அம்சங்களும் காட்டப்படுகின்றன. நுழைவாயிலுக்கும் எலிபன்ராவுக்கும் தினமும் படகுச் சேவை உள்ளது. படகுச் சேவை காலை 9 மணியில் இருந்து பி.ப . 2.30 மணி வரை ஒவ்வொரு அரை மணித்தியாலத்துக்கு ஒருமுறை நடைபெறுகின்றது.

இக்குகைகளில் உள்ள சிற்பங்கள் அகழ்வாராய்ச்சியினரால் பாதுகாக்கப்படுகிறது. நுழைவாயில் கட்டணம் ரூபா 10 ஆகும். வெளிநாட்டவருக்கு 5 அமெரிக்க டொலராகும். 15 வயதுக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு பிரவேசம் இலவசம்.

உல்லாசப் பயணிகளுக்காக இப்பகுதி காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை திறந்திருக்கிறது.

பல்வேறு ஆட்சியாளர்கள் இவ்விடத்தை காலத்துக்குக் காலம் ஆண்டு வந்தார்கள். கி. பி. 1534 இல் இத்தீவு போர்த்துக்கேயர் கைக்குச் சென்றது. அங்கு பிரமாண்டமான யானைச் சிலை இருப்பதைக் கண்டு எலிபன்ரா குகைகள் எனப் பெயரிட்டனர்.

குகையின் பிரதான பகுதி 1909 ஆம் ஆண்டில் இந்திய அகழ்வாராய்ச்சி மேற்பார்வையின் கீழ் வந்தது. 1987 இல் யுனெஸ்கோ எலிபன்ரா குகைகளை உலக அருஞ் செல்வ பட்டியலில் சேர்த்துக் கொண்டது. மனிதனின் அதி அற்புத சிருஷ்டித் திறனுக்கு ஓர் ஒப்பற்ற உதாரணமாகவும் கலாசார மரபுக்கு தனித்துவமானதும் அதிவிசேட உதாரணமானதுமாக இக்குகைகள் விளங்குவதாலேயே இவ்விதம் யுனெஸ்கோ சேர்த்துக் கொண்டது.

எலிபன்ராவின் பிரதான குகை வழமைக்கு மாறான மிகப் பெரியதொரு அகழ்வாகும். இது கிட்டத்தட்ட 130 சதுர அடியைக் கொண்டது. வரிசையாக உள்ள மாபெரும் தூண்கள் இதனைத் தாங்கி உள்ளன.

மகத்தான கற்சிலைகளைக் கொண்ட இக்குகையின் தெற்கு சுவரில் மகேசமூர்த்தி சிலைகள் காணப்படுகின்றன. இப்பகுதிக்கு அர்த்தமண்டபமும், மேற்கு பகுதியில் உள்ள புனித சன்னிதானத்தில் லிங்கமும் அதன் சுவர்களில் பிரமாண்டமான துவாரபாலகர்களும் காணப்படுகின்றனர்.

குகையின் வடக்காக பிரதான வாசலில் வலது, இடது புறமாக சிவன் யோகீஸ்வரனாகவும் நடராஜர் ஆகவும் தோன்றும் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. எனினும் யோகீஸ்வரர் உருவச் சிலை உடைந்து மிகவும் பாதிப்படைந்து தோன்றுகின்றது. அத்துடன் மேலே பறக்கும் தெய்வ உருவங்கள் மற்றும் பிரம்மா, இந்திரன், விஷ்ணு, அன்னம், யானை ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாரும் அறியாத ஒரு சிற்பமேதையின் அற்புத கைவண்ணம்



குகை நுழைவாயில்

சிவன் நடராஜராகத் தோன்றும் பகுதி நன்கு பாதுகாக்கப்படுகிறது. இங்கும் சிலையின் கீழ்ப் பகுதி காணப்படவில்லை. அத்துடன் அப்பகுதியில் பார்வதி, குமரன், கணேசர் உருவச் சிலைகளும் காணப்படுகின்றன.

சிவனின் 108 தாண்டவ நடனங்களும் இங்கு உருவச் சிலைகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. பார்வதியின் நடனத்தைச் சித்திரிக்கும் உருவச் சிலைகளும் உள்ளன. ஆனால் சிவன் தனது ஒரு காலைத் தூக்கி தன் தலையில் தொட்டு ஆடும் காட்சியை பார்வதி தேவி செய்யத் தயங்குவதும் தெரிகிறது.

குகையின் பிரதான பகுதிக்குள் பிரவேசித்தால், இருள் கண்களுக்குப் பழக்கமான ஒன்றாகி விடுகிறது. அங்கு தெரிவது மகேச மூர்த்தியின் பிரமாண்டமான உருவச் சிலையாகும். 3.2 மீ ஆகவும் 6.55 மீ. அகலமும், 8.3 மீ. உயரமும் கொண்டதாக இச்சிலை விளங்குகிறது.

தற்புருஷராக அல்லது மகா தேவராக சிவன் இங்கு தோன்றுவது அற்புதக் காட்சியாகும். அத்துனை மகத்தான சிற்ப வேலைப் பாடுகளுடன் சிவன் இங்கு காணப்படுகிறார். இவருடைய அற்புத பாவங்களும் இங்கு சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. உமா தேவியாரின் பேரழகுத் தோற்றமும் மற்றும் கடவுள்களின் அரிய தோற்றங்களும் இங்கு காணப்படுகின்றன.

மகேச மூர்த்திக்கு இடப் பக்கமாக சிவசக்தி வடிவமான அர்த்த நாரீஸ்வரர் உருவம் காணப்படுகிறது. தெய்வீக இணைப்பினை இது எடுத்துக் காட்டுவதாக உள்ளது. பிரம்மா, விஷ்ணு ஆகியோர் தமது இடங்களில் காணப்பட குமரன், வருணன் மற்றும் ஏராளமான தெய்வ உருவச் சிலைகள் அங்கு நிறைந்து காண்போருக்கு வியப்பைத்தருகின்றன. இப்பகுதியும் மிக கவனமாகப் பேணப்படுகின்றது. இப்பகுதிக்கு வலது புறமாக மிகவும் பாதுகாக்கப்படுகின்ற மிக நேர்த்தியான வேலைப்பாடமைந்த சிவன் பார்வதி உருவங்கள் காணப்படுகின்றன.

இங்கு சிவபெருமான், கங்காதேவியை தனது தலையில் தாங்கி காங்காதரராகக் காட்சி தருகிறார். இங்கு சுவாமி கங்கையைச் சிரசில் ஏற்பதோடு சம்பந்தப்பட்ட புராணக் கதைகளின் காட்சிகளும் சிற்பங்களில் அழகாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

பார்வையாளர்களின் இடப்பகுதியில் சிவசந்நிதானம் உள்ளது. இது கிழக்கைப் பார்த்திருக்கும், நான்கு கதவுகள் கொண்ட சிறிய அறையாகும். சிற்ப வேலைப்பாடுகள் மிகவும் தேர்ந்த முறையில் இங்கு காணப்படுகின்றன.

**இந்திய நுழைவாயிலுக்கு (Gateway) அருகில் (பம்பாய்) அப்போலோ பந்தருக்கு வடமேற்காக சுமார் 11 கி. மீ. தூரத்தில் எலிபன்ரா தீவு உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 173 மீற்றர் உயரத்தில் இரண்டரை கிலோ மீற்றர் நீளமுள்ள இத்தீவு சுமார் 1050 ஹெக்டயர் பரப்புக் கொண்டது. இங்கு மூன்று கிராமங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 1400 பேர் இன்றும் வசிக்கின்றனர்.**



தீவுக்கு செல்லும் பாதை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


சிவ - பார்வதி திருமணம்


மகேசமூர்த்தி

அச்சந்நிதானத்தில் லிங்கம் காணப்படுகின்றது. லிங்கத்தின் கீழ்ப் பகுதி பிரம்மா எனவும் நடுப் பகுதி விஷ்ணு எனவும் மேற்பகுதி சிவா எனவும் கருதப்படுகிறது. இற்றை வரைக்கும் இங்கு மகா சிவராத்திரி தினத்தில் விழா பெரிய அளவில் நடைபெறுகிறது.

**தற்புருஷராக அல்லது மகா தேவராக மகேசமூர்த்தி இங்கு தோன்றுவது அற்புதக் காட்சியாகும்.அத்துணை மகத்தான சிற்ப வேலைப் பாடுகளுடன் சிவன் இங்கு காணப்படுகிறார்.**

### அந்தகாஸ்சுரவதம்

சிவசந்நிதானத்துக்கு பின்புறமாகவுள்ள பகுதியில் சிவன் அந்தகாஸ்சுரனைக் கொல்லும் காட்சிகளைக் காட்டும் சிற்பங்கள் காணப்படுகின்றன. இங்கு சிவன் கோபம் கொண்டவராக அழிவுத் தெய்வமாகக் காட்சி தருகிறார். அந்த சரிதத்தோடு இணைந்த பல்வேறு காட்சிகளும் இங்கு சித்திரிக்கப்பட்டுள்ளன.

இச்சிலைகளுக்கு எதிராக மற்றுமொரு பகுதியில் மிக அழகானதும் அமைதியானதும் திவ்விய அருளை வழங்கும் சோபை கொண்டதுமான சிவபெருமான் காட்சி தருகிறார். இங்கு கல்யாண சுந்தரமூர்த்தியாக பார்வதி தேவியை மணக்கும் காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

மேற்குப் பகுதிக்கு படிகள் மூலம் இறங்கினால் தெரிவது தண்ணீர்த் தொட்டியும் சிவன் தாமரை மலர் மீது அமர்ந்திருக்கும் காட்சியுமாகும்.

கிழக்குப் பகுதிக்குச் சென்றால் அங்கு தற்பெருமையுற்ற சக்திவாய்ந்த அரக்கன் இராவணன் கைலாசமலையை அசைப்பதும் சிவன் தனது பெருவிரலால் அழுத்த அவன், மலையின் கீழ் நசுங்குவதுமான புராணக் கதைக் காட்சிகள் கொண்ட சிற்பங்கள் காணப்படுகின்றன.

அடுத்த பகுதியில் உமாவும் மகேஸ்வரரும் தாயம் விளையாடும் காட்சியும் கிழக்குப் பகுதியில் சிவ சக்தியும் அடுத்து இடதுபுறத்தில் துவாரபாலகர்கள் உருவச் சிலைகளும் வலது புறத்தில் நான்கு தலை துவார பாலகர்களும் மேற்குச் சுவரில் சப்தமாதர்களின் உருவச் சிலைகளும் அடுத்து கணேசர் கார்த்திகேயர் உருவச்சிலைகளும் தோன்றுகின்றன. பிரதான குகைக்குப் பக்கத்தில் வேறு சிறு குகைக் கோவில்களும் காணப்படுகின்றன. மற்றும் ஏராளமான அழிவுக்குள்ளான சிலைகளும் எலிபன்ரா குகைக் கோவிலில் காணப்படுகின்றன.

இவை யாவும் அறியாத மாமேதையான சிற்பியின் அதியுன்னத சிருஷ்டிகள் எனப் போற்றப்படுகின்றன.

- ஜெனிஷா


சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka's Heritage in Hospitality...
# Galle Face Hotel



## Other unique properties of Galle Face Hotel Management Company



**Queen's Hotel**
Kandy



**Suisse Hotel**
Kandy



**Lihiniya Surf Hotel**
Bentota

## Managed by

*Galle Face Hotel Group*

The Galle Face Hotel, No. 2, Galle Road, Colombo 03
Tel: (94) 11 2541010-16, 2543565-77, Fax: (94) 11 2541072/74
Visit : www.gallefacehotel.com

LANEX


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# திருமண விழா

**மணமகன்: திருவாளர் செல்வன் பிரதீப்குமார்**

மதுரை மாவட்டம்,ரெங்கபாளையம், தெய்வத்திரு. வேலுச்சாமி தேவர் அவர்களின் பேரனும் எம்.முத்துச்சாமித்தேவர், எம். கருப்பாயி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும்.


**மணமகள்: திருவாளர் செல்வி ஹேமலதா**

மதுரை மாவட்டம் சென்னம்பட்டி, தெய்வத்திரு. சுப்பையாதேவர் அவர்களின் பேத்தியும், எஸ். சோலைமலைத்தேவர் எஸ். பாப்பாத்தி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும். இவர்களது திருமணம் 13.12.2009ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை காலை, சுபவேளையில் கொழும்பு பம்பலப்பிட்டி, ஸ்ரீ புதிய கதிரேசன் திருமண மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்து தம்பதிகளை நீடூழி வாழ வாழ்த்தினர்.இந்து முறைப்படி நடைபெற்ற இத்திருமணத்தில் சிவாச்சாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யார் திருமணக் கிரியைகளை ஓமம் வளர்த்து முறைப்படி நடத்தி வைக்க, மங்கல நாண்பூணும் வைபவம் சிறப்பாக நடந்தேறியது. திருமண வைபவத்தினை அடுத்து திருமண வரவேற்பு விழா ஹோட்டல் ஹில்டனில் சிறப்பாக நடைபெற்றது.

### மணமகள் அலங்காரம்

திருமணத்தின் போது மணமகள் கண்ணைக்கவரும் வகையில் மரூன்கலரில் அர்ச்சனா சேலையையும் அதேவகையைச் சேர்ந்த பிளவுசையும் அணிந்திருந்தார். அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய போர்டரும் முத்துக்கள் மற்றும் சீக்குயின்ஸ் பதித்த முகதலைப்பும் கொண்ட இச்சேலை இந்திய விலையில் ரூபா 60 ஆயிரம் பெறுமதியானதாகும். ஸ்ரீவெங்கடாசலபதி தாலி அணிவிக்கப்பெற்றது. இது 15 பவுண் தங்கத்தில் செய்யப்பட்டது. இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பூக்களும் மேக்கப் சாதனங்களும் மணமகளின் அலங்காரத்திற்கு மேலும் மெருகூட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமை வாய்ந்த சிகிரியா நகரம்

இலங்கைத் திருநாட்டில் இணையற்ற கலைப் பாரம்பரியத்துடன் கூடிய புராதன இடங்களில் ஒன்றாக சிகிரியா விளங்குகிறது. முதலாம் காசியப்ப மன்னனால் (477-95) உருவாக்கப்பட்ட சிகிரியா நகரின் எச்சங்கள் செங்குத்தான பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றன. சுமார் 370 மீற்றர் உயரக் குன்றில் (சிங்கக் குன்று) இருந்து எல்லா பக்கத்திலும் உள்ள காடுகளைப் பார்க்க முடியும். இலங்கையின் கட்டிடக் கலை மரபு சிகிரியாவில் மிக அழகாக தோன்றுகிறது. ஆசியாவில் மிகச் சிறப்பாக பேணப்படும் நகராக இந்நகரம் கட்டிடங்கள், நந்தவனங்கள், பாறைகள், நீர்த்தோட்டங்கள் மற்றும் இயற்கை செயற்கைத் திட்ட அமைப்பின் எழிலோடு விளங்குகின்றது. இன்றும் அதன் பழைய அமைப்பின் கம்பீர அழகைக் காட்டுவதாக உள்ளது.

சிகிரியாக் குன்று சிற்பங்கள் 6ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டவை என வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. இக்கோட்டையை காசியப்பன் எதிரிகளிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைத்தான் என வரலாறு கூறுகிறது.

### துலங்காத மர்மங்கள்


லௌகீகம், ஆத்மீகம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தும் சிகிரியா ஓவியங்கள், மன்னன் காசியப்பன் அனுராதபுரத்திலிருந்து சிகிரியாக் குன்றை ஏன் தெரிவு செய்தான்? ஓவியங்களில் உள்ள பெண்கள் யார்? என்பன போன்ற மர்மங்கள் சிகிரியா அமைக்கப்பட்டு 1500 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், துலங்காமல் தொடர்கின்றன.

### யார் இந்தப் பெண்கள்?

சிகிரியா ஓவியங்கள் சித்தரிக்கும் பெண்கள் புத்தரைத் தரிசிக்கச் செல்லும் மகளிர் என வரலாற்றாசிரியர்களால் நம்பப்படுகிறது. அவர்கள் கைகளில் ஏந்தியிருக்கும் அல்லி மலர்கள், முகத்தில் வெளிப்படும் பக்தி உணர்வு ஆகியவற்றை சில வரலாற்றாசிரியர்கள் இதற்குச் சான்றுகளாக முன்வைக்கின்றார்கள். இந்தப் பெண்கள் காசியப்பனின் அந்தப்புரத்து மகளிர் என்றும் கருதுகின்றனர் சில வரலாற்றாசிரியர்கள். யார் இந்தப் பெண்கள் என்ற வினாவுக்கு விளக்கம் இதுவரை எந்த வரலாற்றாசிரியராலும் முழுமையாக முன்வைக்கப்படவில்லை. துர்க்குணங்கள் நிறையப் பெற்ற காசியப்ப மன்னனின் அரண்மனையில் பெண்கள் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள் எனவும் நம்பப்படுகிறது. எதுவாக இருந்தபோதிலும் பெண்களின் இடையமைப்பு, முக அமைப்பு என்பன அஜந்தா ஓவியம் மற்றும் பல்லவர் கால சித்தான வாசல் ஓவியங்களின் சாயல்களைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மன்னன் வரைந்த ஓவியங்கள்

சிகிரியாவில் மொத்தம் 27 ஓவியங்கள் ஆரம்பத்தில் காணப்பட்டன. தகுந்த கவனிப்புகள் இன்றி அவை அழிந்து விட்டன. தற்போது ஏழு ஓவியங்கள் மாத்திரம் காணப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுகின்றன. ஓவியங்கள் அனைத்தும் காசியப்பன் மன்னனாலேயே வரையப்பட்டுள்ளது. சுண்ணாம்பு, தேன், கபுக்கல் போன்றவற்றைக் கலந்து பாறையில் பூசிய தளத்திலேயே (ஈரம் காய்வதற்கு முன்) ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் ஈரச் சுதை ஓவிய வகைக்குள் உள்ளடக்கப்படுகிறன. ஓவியங்களுக்கு இயற்கையான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது மரத்திலிருந்து கிடைக்கப்படும் பசைவகை (மரத்திலிருந்து பசை வடியும் போது ஒரு நிறமாகவும் சற்று நேரம் செல்ல வேறு நிறமாகவும் சில நாட்கள் கழிய கறுப்பு நிறமாகவும் மாறும் தன்மை கொண்டது. இந்த நுட்பம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.), பரப்பட்டைச் சாயம் என்பனவாகும்.

கண்ணாடிச்சுவர் ( தற்போது மங்கலாகக் காட்சி தருகிகிறது) தேன், கபுக்கல் கொண்டு ஓவியம் வரைவதற்கு தயார் செய்யப்பட்ட பகுதியாகும் இது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் ஓவியங்கள் வரையப்படவில்லை.



**பாதுகாப்பா? கலைத்துவமா?**

காசியப்பன் சிரியாவில் பாதுகாப்பானதும், கலைத்துவமானதுமான கோட்டையை அமைத்து, அனுராதபுரத்திலிருந்து தலைநகரை இங்கு மாற்றிக் கொண்டான் என வரலாறு கூறுகின்றது. 600 அடி உயரமான குன்றின் மீது இவன் அரண்மனயை அமைத்தான். படிக்கட்டுகள் மூலம் மலையின் நடுப்பகுதிக்கு போக முடியும். இதிலிருந்து மலையின் வடக்குப்பக்கத்திலுள்ள மேடைக்கு போக முடியும். இம் மேடையிலிலுந்து படிக்கட்டுகள் மண்ணினால் அமைக்கப்பட்ட ஒரு பெரிய சிங்கத்தின் கடைவாய்க்கு ஊடே உயர்ந்து செல்கின்றன. குன்றின் உச்சியில் அரண்மனை அத்திவாரத்தின் சிதைவுகள் காணப்படுகின்றன. இது தேவ அரசர்களின் அரண்மனைக்குச் சொல்லப்பட்ட விதிகள் அடங்கிய அமைப்பையும் கொண்டுள்ளது. இயற்கையான மூன்று ஊற்றுகள், பூங்கா, மன்னன் - மகாராணி குளிக்கும் தொட்டி போன்றவை இன்றும் சிதைவுகளுடன் காணப்படுகிறன. மேற்குப்புற பாறைச்சுவரில் சிகிரியா ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

குன்றின் கிழக்கும் மேற்கும் மதில்களாலும் அகழிகளாலும் அரண் செய்யப்பட்டிருக்கின்றன. மதிலின் சில பகுதிகள் இன்றும் அழியாமல் இருக்கின்றன. இம் மதிலின் சில பகுதிகள் 30 அடி உயரமுடையன. அகழி 14 அடி ஆழமும் 82 அடி அகலமும் கொண்டது.

பாதுகாப்புக்காக நிறுவப்பட்டது என நம்பப்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட இலட்சியம் அல்லது கலைநோக்குக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகவே கருதப்படவேண்டும். ஐக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு அமைப்பினால் (யுனெஸ்கோ) கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் தெரிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய முக்கிய இடமாக 1982 இல் சீயகிரி என்ற சிகிரியா அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மறைக்கப்படும் மன்னனின் வரலாறு



சிங்கள வரலாற்றுக் குறிப்புகளில் காசியப்பன் மன்னனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இவனது பாவச்செயல் பற்றியே (தந்தையைக் கொன்றமை) மிகுதியாகக் கூறப்படுகிறது. மாகா விகாரைப் பிக்குகள் இவன் வழங்கிய கொடைகளை ஏற்க மறுத்ததாக சூளவம்சம் கூறுகின்றது. குறிப்பாக காசியப்பனுக்கு வரலாற்று முக்கியத்துவம் கொடுத்த சிகிரியா பற்றி முழு விபரங்களையும் அறிய முடியாமல் ஊகங்களையும் மனம் போன போக்கில் கூறப்படும் கருத்துக் களையும் கேட்கும் நிலையில் இருக்கின்றோம்.


அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த தாதுசேனனுக்கு மூன்று குழந்தைகள். மூத்தவன் காசியப்பனின் தாய் தாழ்ந்த சாதி என்பதால் சிம்மாசனத்துக்கு அருகதையற்றவனானான். முகலன் பட்டத்தரசியின் மைந்தன்; சிம்மாசனத்துக்கு உரியவன். மூன்றாவது குழந்தை சேனாதிபதியை மணந்து கொண்டாள். மகளை மாமியார் கொடுமைப்படுத்தியதால் அப்பெண்ணை தாதுசேனன் எரித்துக் கொன்றுவிட்டான். இதனால் சேனாதிபதி தாதுசேனனுக்கு விரோதியானான். சிம்மாசனத்தைக் கைப்பற்ற சமயம் பார்த்துக்கொண்டிருந்த காசியப்பனுடன் சேர்ந்து தாதுசேனனை எதிர்த்தான். தந்தையைச் சிறையில் தள்ளி, சிம்மாசனத்தைக் கைப்பற்றியதுடன் தந்தையையும் கொன்றான். தம்பி முகலனையும் ஒழித்துவிட முயல, அவன் இந்தியாவுக்கு தப்பி ஓடினான்.

காசியப்பன் அனுராதபுரத்திலிருந்து சிகிரியாவுக்கு தலைநகரை மாற்றிக் கொண்டமையானது, முகலன் தென்இந்தியாவிலிருந்து பெரும்படையோடு வந்து தன்னை எதிர்ப்பான் என அஞ்சியே இந்த பாதுகாப்பான இடத்தைத் தெரிவு செய்ததாக சில வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். அனுராதபுர மக்களுக்குப் பயந்து சிகிரியாவுக்கு சரண் புகுந்ததாக வேறு சிலர் கருதுகின்றார்கள். சிகிரியாக் கோட்டையை அமைக்க ஐந்து ஆண்டுகள் கழிந்தன. மக்களுக்குப் பயந்த அரசன் தற்காலிகமாக ஒதுக்கிடம் தேடுவானேயன்றி இவ்வளவு நீண்ட காலத்தில் அமைக்கப்பட வேண்டிய ஒரு இடத்தை தெரிவுசெய்தான் என்பதும் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது.

காசியப்பன் தன்னைக் கடவுளாகக் கருதினான் என்றும் சிலர் கருதுகின்றார்கள். அக்காலத்து தேவராசர் உயர்ந்த மலைகளில் அமைக்கப்பட்ட விசேட அரண்மனைகளில் வாழ்ந்தார்கள். இக்காரணத்தால் காசியப்பன் சிகிரியாவைத் தலைநகராக்கினான் என சில வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றார்கள்.

பி.ஜோன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அமைவிடம்

வடமத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் கிழக்குப் புறம்.

## பயண வழி

கொழும்பிலிருந்து 186 கி.மீ தொலைவில் உள்ளது. தம்புள்ள - ஹபரணை (ஏ6) பிரதான வீதியில் இனாமலுவவிலிருந்து 10 கி.மீ கிழக்காக சிகிரியாவுக்கு செல்ல திரும்ப வேண்டும். தம்புள்ள நகரத்திலிருந்து காலையில் ஒவ்வொரு 30 நிமிட இடைவெளியில் பஸ் சேவைகள் உள்ளன. தம்புள்ள யிலிருந்து முச்சக்கர வண்டிக்கு ரூபா 500 கட்டணமாக அறவிடப்படுகின்றது.

## தங்குமிடங்கள்


இயற்கை எழில் கொஞ்சும் சிகிரியாக் கிராமத்தில் வசதிக்கு ஏற்றவாறு உல்லாசப் பயண விடுதிகள் பல உள்ளன.

## அனுமதி நேரம்

காலை 6.30 மணி முதல் மாலை 7 மணிவரை திறக்கப்பட்டிருக்கும். ஆனால் 5 மணிக்குப் பின்னர் அனுமதி இல்லை. அனுமதிக்கட்டணம் 20 அ. டொலருக்குச் சமமான இலங்கை நாணயம்.

## ஆலோசனை

தண்ணீர் எடுத்துச் செல்வது அசௌகரியங்களைத் தவிர்க்கலாம். காலையில் சூரிய உதயம் குன்றின் உச்சியில் காண்பது மனதுக்கு ரம்மியமானது. ஊச்சி வெயிலில் மலை ஏறுவதைத் தவிர்ப்பதும் நல்லது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரியில் முக்கிய கலை, கலாசார நிகழ்வுகள்

## இலங்கையில்

**கொழும்பு தமிழ்ச்சங்கம்**

**ஜனவரி 24 :-** மாலை 5 மணி - வெள்ளவத்தை இந்து சமய கலை, கலாசார வளர்ச்சிப் பணிமன்றம் மேடையேற்றும் 'சம்சாரம்', 'லண்டன் பிஆர் மாப்பிளை' ஆகிய இரண்டு நாடகங்கள் உட்பட இரா. தணிகாசலத்தின் (கனடா) இசைச் சித்திரம்.

**இந்திய கலாசார நிலையம்**

**ஜனவரி 20 :-** மாலை 6 மணி - பழைய இந்தி திரைப்பாடல்கள், படங்கள் ரசிகர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள சர்வதேச இந்தி தின நிகழ்வுகள்.

## சர்வதேசத்தில்

**இந்தியா**

**ஜனவரி 25 :-** மாமல்லபுரம் (தமிழ்நாடு) நடன விழா ஜனவரி 25 வரை நடைபெறும். சென்னை இசைவிழா நிகழ்ச்சி நிரலில் இதுவும் உள்ளது.

**ஜனவரி 29 :-** மதுரையில் பௌர்ணமி தினத்தன்று தெப்பக்கோல விழா ( Float விழா).

**மலேசியா**

**ஜனவரி 30 :-** மலேசியா - கோலாலம்பூருக்குப் பக்கத்தில் உள்ள பாது கேவ்ஸில் (Batu Caves) மாபெரும் தைப்பூசவிழா.

**சிங்கப்பூர்**

**ஜனவரி 30 :-** தைப்பூசவிழா.

**கனடா**

**ஜனவரி 29 :-** கியூபெக் நகரில் ஜனவரி 29 - பெப்ரவரி 14 வரை கோலாகலமான மாரி கால களியாட்ட விழா.

**அவுஸ்திரேலியா**

**ஜனவரி 09 :-** சிட்னி நகரில் ஜனவரி 9 - ஜனவரி 30 வரை மாபெரும் சிட்னி கலை விழா.

**சுவிட்சர்லாந்து**

**ஜனவரி 30 :-** Oensingen
கலாஸ்ரீயின் பரத நாட்டியம் மற்றும் பொலிவுட் நடனங்கள் (நிதி திரட்டும் நிகழ்ச்சி)
முன்பதிவு: 062 3960088 , keshava@kalasri.com

**லண்டன்**

**ஜனவரி 19 :-** The Mill by Ockham's Razor produced by Turtle key Arts.(January 19 - 21)
Premiere 19 - 21 January 2010
The Linbury Studio, Royal Opera House London

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள எழுத்தாளர்கள், மற்றும் கலை, இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து இலக்கியம், கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு ஆகியன குறித்த கட்டுரைகளையும், தகவல்களையும் அதனோடு தொடர்புடைய தெளிவான படங்களையும் எதிர்பார்க்கிறோம்.

- ஆசிரியர்

EDITOR, KALAIKESARI
NO.185, GRANDPASS ROAD, COLOMBO -14, SRILANKA.
email:- editor@kalaikesari.com/subscription@kalaikesari.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை அல்பம் தயாரிப்பில்

## ஆஷா போஸ்லேயுடன்

## பாத்தியா- சந்தோஷ்







இந்திய பொப் பாடகி ஆஷா போஸ்லேயுடன் சிங்கள இசைஉலகின் ''இசைபுரட்சியாளர்கள்'' என வர்ணிக்கப்படும் பாத்தியா- சந்தோஷ் இரட்டையர்கள் இணைந்து இசை அல்பம் ஒன்றை தயாரித்து வருகிறார்கள். இது தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு கொழும்பு சினமன் லேக் சைட் ஹோட்டலில் நடைபெற்றபோது ஆஷா போஸ்லே, பாத்தியா-சந்தோஷ், மற்றும் இசையமைப்பாளர் ஸ்ரீ சியாமளன் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள்.

## கேச அலங்கார காட்சி





கொழும்பு கலதாரி ஹோட்டலில் சன்சில்க் ஏற்பாட்டில் நடத்தப்பட்டஹேர் ஆர்ட் 2009 நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படங்கள். ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க கேச அலங்காரத்துடன் மொடல்கள்



## டிஸ்கோராஜாவின் நடன நிகழ்ச்சி





மேடை நாட்டியக் கலைஞர் டிஸ்கோ ராஜாவின் வெற்றி வெள்ளி விழா நிகழ்ச்சி அண்மையில் பொரளை வை. எம்.பி. ஏ. மண்டபத்தில் புரவலர் ஹாசிம் உமரின் முன்னிலையில் நடைபெற்றது. அவ்வேளை இடம்பெற்ற பரதநாட்டியம், டிஸ்கோராஜா மற்றும் நடிகை சாந்தி பானுஷா ஆகியோரின் நடனங்களை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express NewsPapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo- 14, on January 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org